கார்த்திகை—மார்கழி 1979

## ஒளி மலர்

"உலகமோ அவரை
அறிந்து கொள்ளவில்லை
தமக்குரிய
இடத்திற்கு வந்தார்
அவருக்கு
உரியவர்களோ
அவரை
ஏற்றுக்
கொள்ளவில்லை"
அரு. 1 : 10—11



# புதிய உலகம்

# புதிய உலகம்

நத்தார்—புதுவருட விழாக்களைக் கொண்டாடும் எமது அன்பர்கள் அனைவருக்கும் எங்கள் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

ஆசிரிய — நிர்வாகக் குழுவினர்

மூன்றாவது ஆண்டு
மலர் — 18
கார்த்திகை — மார்கழி 1979

பொறுப்பாசிரியர்
யே. நீக்கிலஸ்

துணை ஆசிரியர்
நாவண்ணன்

அமைப்பு
மைக்கல் ஜோசவ்

வெளியீடு
கிங்ஸ்லி சுவாம்பிள்ளை

தொடர்பு
"புதிய உலகம்"
த. பெ. எண் 2
யாழ்ப்பாணம்

"PUTHIYA ULAGAM"
P. O. Box 2,
Jaffna.

விலை ரூபா 1-00 ஆண்டுச் சந். 6-00

சிந்தனையூட்டும் சஞ்சிகை

## புதிய உலகிலே...

| | பக்கம் |
|---|---|
| எமது பார்வை ... | 1 |
| இறைவன் மனுவானதாலே | 4 |
| மனித உரிமைகளும்..... | 5 |
| தேவசுதன் இன்று பிறந்தார் | 8 |
| மறை இயல் ... | 10 |
| வணங்கி வாழ்ந்திடுவீர் ... | 12 |
| மங்கையர் திலகம்...... | 13 |
| புதுமைப்பெண் ... .. | 17 |
| ஓரம்போ ... ... | 19 |
| பாலகன் தோன்றியது எமக்காகவா ? ... | 20 |
| ஊசி முனையில் ஒட்டகம் | 21 |
| எல்லாம் மன்னித்த மன்னவனல்லவா ! | 23 |
| மண்ணிலும் முளைக்கும் நட்சத்திரம் | 24 |
| விடிவு ... | 30 |
| எண்ணியதை எண்ணியபடி | 31 |
| சிறுவர் உலகு ... .. | 36 |
| உன் பாதை நீ கண்டு ... | 37 |
| இருள் அகன்றது ... | 38 |
| மார்கழி நோன்பு ... | 44 |
| புதுமைப் பதில் ... ... | 47 |
| உங்கள் பார்வை ... | 48 |

படைப்புகளுக்குப் பொறுப்பு படைத்தவர்களே
கருத்துகளுக்கு உரியவர்கள் உரைத்தவர்களே ஆ—ர்.

( FOR PRIVATE CIRCULATION ONLY )

Puthiya Wagam

# எமது பார்வை

## புத்தொளி பிறக்கட்டும்

N. Kalasarogy
Pannakam.

இருள் என்றுமே பயங்கரமானது. வாழ்க்கையில் பலவகையான இருள்கள் இருக்கின்றன. புறத்தேயுள்ள இருளைவிட அகத்தே உள்ளே இருளே என்றும் ஆபத்தானது.

அடிக்கடி திருடுகின்றவன் அதிலே உருசியைக் காணுகின்றான். அது பாவமென்பதை உணரத் தவறுகின்றான். அகத்தே இருள் படிந்திருப்பவனும் தன் நிலை உணரத் தவறுகின்றான். அச்சமென்பதே அவனிடம் கிடையாது. நீதிக்குத் தலை வணங்கான்; அன்புக்கு அடிபணியான்; இரக்கத்தை ஒருபோதும் நினையான்; நேர்மையை ஒருபோதும் அறியான்: இதுவே அவனது பரிதாப நிலை.

### தீமைகள் ஒழியட்டும்

இன்று உலக நாடுகளிலும் நமது நாட்டிலும் நடைபெறும் சம்பவங்கள் பல நமக்கோர் மர்மம், புரியாத புதிர்???

வளமிக்க நாடுகள் முன்னேற முனையும் நாடுகளுக்கு வழிகாட்டிகளா? அன்றேல் வழிகட்டிகளா? போர்ப்பறை எங்கோ என்றோ கேட்காமல் போவதில்லை! வேண்டாத போட்டிகள் நாடுகளைத் தீண்டாமல் விடுவதில்லை.

### ஊழல்கள் நீங்கட்டும்

நம் நாட்டில் நடைபெறுகின்ற ஊழல்கள் ஆயிரமாயிரம் வெளிநாட்டு வேலைகளுக்கு ஆட்கள் சேர்க்க ஏஜண்டுகள் அநேகம். அனுப்புவதற்கு அட்வான்ஸ் ஆயிரம் தொடக்கம் ஐயாயிரம் வரை. மாதங்கள் சென்றும் டிக்கெற் வரவில்லை. இப்படியும் ஒரு பிழைப்பு. பணம் கொடுத்தவன் பரதேசி ஆகின்றான்.

உள்நாட்டு உத்தியோகங்கள் சும்மாவா? வாலைப்பிடித்துத் தலையில் ஏறுவதற்குக் கை இலஞ்சம். வாத்தியார் வேலைக்கு ஆறாயிரம். உத்தியோக உயர்வுக்கு ஏழாயிரம். இப்படியும் ஒரு வியாபாரம்!

மாணவர்களின் பரீட்சைத் தாள்கள் திருட்டு; திருடியவன் கோடீஸ்வரன்; பிரதிகள் விநியோகம்; வாங்குவோர் ஆயிரம்; ஏமாறுவோர் எண்ணிலடங்கா. அதுமட்டுமா? பரீட்சைக்குப் பின்னும் இருட்டடிப்பு, புள்ளிகளைத் திருடவும் பல புள்ளிகள் இருக்கின்றார்களே!

## ஏழைகள் வாழட்டும்

விலைவாசி உயர்வாலும், அளவுக்கு மீறிய உணவுப் பொருள் இறக்குமதியாலும் குறிப்பாக வடபகுதி விவசாயிகள் வாழ வழியின்றி ஏங்கித் தவிக்கின்றனர், உள்நாட்டு உற்பத்திகள் ஊக்குவிக்கப்படவில்லையென்றால் அபிவிருத்தி யென்பது ஆகாத செயலாகும். ஏழைகளின் கண்ணீரும், வறியவர்களின் விரக்தியும் பெருகிக் கொண்டே போகின்றது.

## நீதி நிலவட்டும்

அமைதியில் வாழும் மக்களுக்கு ஏன் அ'..க்கு முறைச் சட்டம்? சந்தேகம் என்றவுடன் இளைஞர்களுக்குச் சித்திரவதை ஏன்? குற்றம் புரியாதவர்களைக் கூண்டுக்குள் அடைப்பதேன்? நீதியைக் கேட்பதற்குத் தணிக்கைகள்? ஏன்? விசாரணையின்றி ஆதாரமின்றி அநியாயமாய்த் தண்டிப்பபடுவதேன்?

## இருள் நீங்கட்டும்

ஆம்! இத்தனை சம்பவங்களும் நம் நாட்டின் இருள் மயத்தையே சுட்டிக்காட்டுகின்றன. அப்படியென்றால் இவ்விருளைப் போக்கவல்ல ஒளிவேண்டுமென்பதில் சந்தேகமில்லை. இந்த ஒளிக்கு விழா எடுப்பது தகுதியும், நீதியுமாகும். கிறிஸ்மஸ் விழா எமக்கு ஒளிவிழா.

பாவ இருள் சூழ்ந்த இப்பாரினிலே பரமனின் ஒளி பிரகாசிக்க மனுவுருவானார் கிறிஸ்து. "அவ்வொளி இருளில் ஒளிர்ந்தது" என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

மகிழ்ச்சி பொங்கட்டும்

அன்பு, மகிழ்ச்சி, சமாதானம் ஆகிய பண்புகளைக் கிறிஸ்து இவ்வுலகிற்குக் கொண்டு வந்தார். இப்பண்புகளை நாமும் பெற்றுப் பிறரும் பெற வழி வகுப்பதே கிறிஸ்மஸ் விழா.

இவ்வாண்டு கிறிஸ்தவ உலகு கொண்டாடும் கிறிஸ்மஸ் விழா அனைவரின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் பாவ இருள் நீங்கி, புத்தொளி நிறைந்து விளங்க வழிவகுப்பதாக. உங்கள் அனைவருக்கும் அன்பும் அமைதியும் நிறைந்த எமது கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்.

— ஜே. நீக்கிலஸ்.

## வாசகர்களே !

*1980-ம் ஆண்டுக்குரிய உங்கள் சந்தாக்களைப் புதுப்பித்து விட்டீர்களா? இங்கு வெளியிடப்பட்டுள்ள படிவத்தை வெட்டி நிரப்பி அனுப்பி உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள். இதுவரை சந்தா தாராகப் பதிவு செய்து கொள்ளாதவர்கள் பதிவு செய்து கொள்ளுங்கள்.*

## சந்தாப்படிவம்

தயவு செய்து எனக்கு (பெயர்) ..............................

முகவரி ..............................

..............................

சந்தா எண் ..............................

'புதிய உலகம்' ஒன்று / இரண்டு / மூன்று / ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கவும். இத்துடன் என் சந்தாப்பணமாக ரூபா 6/- ரூபா 12/- ரூபா 18/- காசுக்கட்டளையாக (M. O,) / தபாற் கட்டளையாக (P. O.) காசோலையாக (Cheque) அனுப்பி வைக்கிறேன்.

ரூபா ..........

திகதி .............. ..............

கையொப்பம்

# இறை மனுவானதாலே....?

அலக்ஸ் சந்திரபோஸ்,
வங்காலை.

இருளகன்றது ஒளிபிறந்தது
மருள்மறைந்தது மதிதிறந்தது
அருள்நிறைந்தது அன்புகனிந்தது
பரன் பிறந்ததாலே.............

இடரகன்றது வழிபிறந்தது
கடர்கான்றது சுவைமீண்டது
தடையகன்றது தரணிவென்றது
கடவுள் வந்துதித்ததாலே.............

கறையகன்றது கனிபிறந்தது
மறைமலர்ந்தது சிறைதிறந்தது
நிறைவுகொண்ட உளம்தெரிந்தது
இறை மனுவானதாலே.............



# "மனித உரிமைகளும் மனித உரிமைகள் மீதானமீறுதல்களும்"

### மனித உரிமைகள் மறுக்கப் படுகின்றன :

மனித அடிப்படை ஜனநாயக உரிமைகளை உலக மன்றமான ஐ. நா. சபை அகல் விரிவாகப் பிரகடனப்படுத்தியுள்ள பொழுதி லும், ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகள் அனைத் தும், சம்பந்தப்பட்ட உரிமைகளை அங்கீகரித்திருப்பதாகவும், ஏற் றுத் தத்தம் நாடுகளில் அமுல் நடத்தி வருவதாகப் பெருமை பேசி வருகின்றபொழுதிலும் கூட, "எந்தவொரு நாடும் மனித உரிமைகளைப் பொறுத்த

> மார்கழி 10-ம் நாள் மனித உரிமைகள் தினம். கிறிஸ்து பெருமான் மனித உரிமை களை மீட்டளிக்க வந்தவர். எனவே, அவரது பிறப்பைச் சிறப்பிக்கும் இவ் ஒளிமலரில் மனித உரிமைகள் பற்றிய இக் கட்டுரையைப் பிரசுரிப்பதில் மகிழ்வடைகிறோம்.
>
> — ஆர்.

மட்டில் குறைபாடு இல்லாது நிறைவு பெற்றதாக இல்லை என்பது வெளிப்படையானது. வெளிப்படையாகச் சர்வாதிகார நாடென்று கூற முடியாவிட்டா லும், அநேகமான நாடுகளில் அர சாங்கங்கள் மேலாண்மையுடை யன என்பது ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளது. புதினப் பத்திரிகை கள் யாவும் ஒன்றில் முகாமைப் படுத்தப்பட்டுள்ளன, அல்லது கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அரசியல் கட்சிகளோ ஒன்றில் பேடிகளாக மாற்றப்படுகின்றன. சட்ட விரோதமானவையெனத் தடை செய்யப்படுகின்றன. தேர் தல்களில் கூட பெரும் மோசடி கள் நிகழ்கின்றன. தீங்கு விளைக் கும் இயல்பு பெறுதவரைக்கு மட் டுமே மாறுபட்ட கருத்துக்கள் சகித்துக் கொள்ளப்படுகின்றன."

### யொஸ் தியொக்னோ கருத்து:

"அநேகமான நாடுகளில் ஒரு தலைமுடிவாகவே மக்கள் கைது செய்யப்படுகிறார்கள். நீண்ட காலம் மனிதத் தன்மைக்கு மாறான நிலைவரங்களில் நீதி விசாரணை எதுவுமின்றித் தடுப்புக் காவலில் வைத்திருக்கப்படுகின்ற னர். கொடூரமான சித்திரவதை களுக்கு ஆளாக்கப்படுகின்றனர். உத்தியோக பூர்வமான அங்கீ காரத்துடன் உத்தியோகப் பற் றற்ற மரண தண்டனைகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர்" என்று இலங்கையில் இடம் பெற்ற சட்ட

ஆசிய மாநாட்டில் உரை நிகழ்த்துகையில், பிலிப்பைன்ஸ் நாட்டின் முன்நாள் நீதியமைச்சரும், சட்டத்துறைப் பேராசிரியரும், முன்னாள் மேலவை உறுப்பினருமாகிய திரு யொஸ் தியொக்னோ குறிப்பிட்டிருக்கிறார். இத் தினசரிகளில் இடம் பெறாத அவரது பேச்சு "லங்கா காடியன்" பத்திரிகையில் மட்டும் பிரத்தியேகமாக வெளியிடப்பட்டுள்ளது.

பேராசிரியர் யொஸ் தியொக்னோ குறிப்பிட்டுள்ள மனித உரிமைகள் மீதான மீறுதல்கள் யாவும், மேற்படி சட்ட ஆசிய மாநாட்டில் கலந்து கொண்ட பேராளர்களின் நாடுகளிலேயே இடம் பெற்று வருவதாக ஊகிக்க இடமுண்டு.

## நடப்பவை என்ன?

அநேக நாடுகளில் தொழிற் சங்கங்கள், விவசாயிகள் சங்கங்கள், மாணவர் சங்கங்கள் நகர வறிஞர் சங்கங்கள் நசுக்கப்படுகின்றன. அவற்றின் தலைவர்கள் வேட்டையாடப்படுகின்றனர். அல்லது சிறையில் அடைக்கப்படுகின்றனர். குற்றச் செயல்களுக்காகப் பெண்கள் சுரண்டப்படுகின்றனர். சர்வதேச முதலீடுகளுக்கான முதலீடுகளைக் கவருவதற்காகக் கூலி குறைக்கப்படுகிறது. அறிஞர்களின் சிந்தனைச் சுதந்திரத்துக்குப் பாரதூரமான கேடு சூழப்படுகிறது. இராணுவ நடவடிக்கைகளுக்காக, அல்லது பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்காக முழுச் சமுதாயங்களே வேருடன் பெயர்க்கப்படுகின்றன. கோடிக்கணக்கான பணம் இராணுவத்திலும், உல்லாசப் பயணத்துறைக்காகவும் மற்றும் வர்த்தகத்துக்காகவும் செலவிடப்படுகின்ற நேரத்தில் மக்களில் பெரும்பாலோருக்கு வீடில்லை. அல்லது புறாக்கூடுகள் போன்ற லயின் வீடுகளில் மந்தைகள் போல் அடைந்து வாழவிடப்படுவர். உண்ண உணவில்லாது மக்கள் பஞ்சத்தில் தவிப்பார்கள். நோயினால் பீடிக்கப்பட்டிருப்பர். கரிசனையற்றதாகவிருக்கும் அவர்களது வாழ்க்கை.

> **சமுதாயம்**
>
> சமுதாயம் என்றால் என்ன? ஒவ்வொரு மனிதனுடைய உரிமைகளையும் பலபேர் சேர்ந்து தங்கள் பலத்தினால் பாதுகாக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிற ஒரு ஜனத் தொகுதிக்கே சமுதாயம் என்று பெயர்.
>
> — மாஜினி.

## ஏற்படவேண்டிய உணர்வு !

இத்தகைய கொடூரங்கள் நமது இலங்கைத் தீவில் எந்தக் காலத்திலும் நிகழாது தடுப்பதற்குப் பொது மக்கள் சதா விழிப்புடன் இருக்க வேண்டும். அந்த வகையில், மனித உரிமைகள் பால் அவர்களுக்கு நாட்டத்தை ஏற்படுத்த வேண்டும். சம்பவிக்கும் மனித உரிமை மீறுதல்களையிட்டு ஏனோதானோ என்ற அசிரத்தை

யான மனப்போக்கு நீங்க வேண்டும். இன்று அயலவருக்கு நடப்பது நாளை எவருக்கும் சம்பவிக்கலாம்; ஏன் எனக்கே நடக்கலாம் என்ற உணர்வு நம் ஒவ்வொருவரிடமும் ஏற்பட வேண்டும்.

அத்தகைய உணர்வு நிலையைத் தோற்றுவிப்பதற்கும், மனித உரிமை மீறுதல்களை நிகழவிடாதுகாக்கும் மனப்பக்குவ நிலையைத் தோற்றுவிப்பதற்கும், மனித உரிமைகள் பற்றி நன்கு பிரச்சாரம் செய்யப்படல் வேண்டும். மனித உரிமைகள் இயல்பாக வருவன. எனவே அவை மனிதனின் பிறப்புரிமைகள். அவற்றை அனுபவிப்பதும் ஏனையோரும் அனுபவிக்கச் செய்வதும் வெறும் கடமை மட்டுமல்ல. அது ஒரு நிர்ப்பந்தமும் கூட. கடமையில் இருந்து தப்பலாம், கடமையை அசட்டை செய்யலாம், நிர்ப்பந்தத்தில் இருந்து விடுபட வழியில்லை. ஆகவே மனித உரிமைகள் நிலைபெற வேண்டுவது முடிந்த முடிவாகும். இப்போராட்டத்தில் வெற்றி பெறுவதற்கு நம் ஒவ்வொருவருக்கும் ஆண்டவன் நல்ல பக்குவப்பட்ட மன நிலையைத் தர வேண்டும். வருடாவருடம் மார்கழித் திங்களில் வரும் "மனித உரிமைகள் தினம்" அதற்குப் பயன்படுகின்றனவா?

அதன் நிமித்தம் அந்நாளில் உலகம் பூராவும் மேற்கொள்ளப்படும் பணிகள், பிரச்சாரங்கள் பூரண பயன் தரவேண்டும்.

— இன்பரசு

# எமது அடுத்த இதழ்

*1980*

தை — மாசி

## "தமிழர் பண்பாட்டு இதழ்"

எமது எழுத்தாளர்கள் தமது ஆக்கங்களை இத் தலைப்புக்கு ஏற்ப அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

— ஆர்.

❁ ஓரங்க நாடகம்

# தேவசுதன் இன்று பிறந்தார்

இடம் : மலைச்சாரல்
பாத்திரம் : இடையர் மூவர்
நிலைமை : பாடிக்கொண்டு மந்தைகளை மேய்த்தல்

இடையன் I

சின்னச் சின்ன ஆடுகளா ;
எங்கள் சீரான குட்டிகளா ;
வண்ண வண்ணச் சோடிகளா ;
உங்க வயசுகள் ஏற நாம்பனடா.

அந்தி மாலே நேரமடா
நம்ம ஆட்டு மந்தையை மேய்ப்போமடா
விந்தையான வாழ்க்கையடா — எங்கள்
பஞ்சம் தீர்க்கும் தெய்வமடா

இடையன் II

சாச்சுவா கறுப்பையா கூட்டமாய் — அந்த
விளிகொம்பன் நெளிகொம்பன் ஜோடியாய்
பாய்ச்சல்காரன் போற போக்கைப்பார் — அது
வாலைக் கிளப்பியே பாயுது

இடையன் III

கல்லுமலையிலே வெள்ளாடு துள்ளி மேய்கையிலே
தொந்தி பெருத்ததொரு மந்திக் குரங்கொன்று
துள்ளிப் பாயும்போது லத்தி விழுந்தது
ஆடிக்கை தட்டியதே ஜோராக
வேடிக்கையாகச் சிரித்தேன்

(மூவரும் பாடி முடியும்போது
எங்கிருந்தோ ஒரு குரல் கேட்கிறது)

குரல் :

மார்கழி இரவினிலே ; வெள்ளை மாமலை ஓரத்திலே
மாடாடு வாழுகின்ற குகையூடே யேசு பிறந்தார்
மாட்டு மந்தை மேய்த்த இடையர் — அன்றிரவு
கூட்டமுடன் காவல் புரிந்தார்
நித்திரை இல்லாததால் — அவர்கள்
முற்றும் விழித்திருந்தார்

(இந்நேரம் தேவதூதன் அவ்விடத்தில் தோன்றுகிறார்)

தேவதூதன் :

அஞ்ச வேண்டாம் இங்கு என்னைக்
கண்டுநீர் — என்னைக் கண்டுநீர் — இங்கு
அருமையான சேதி கொண்டு வந்தேன் நான்
ஆனந்தமான செய்தி, அக்களிப்பான செய்தி
அகில உலகும் அகமகிழ ஆவலுடன் காக்கும் செய்தி
— அஞ்சவேண்டாம் .. ...
தாவீதின் நகரில் தேவசுதன் இன்று பிறந்தார்
இதோ அடையாளம் கந்தைப் போர்வைக்குள்ளே
காண்பீர்
தாவீதின் நகரில் தேவசுதன் இன்று பிறந்தார்

(தேவதூதன் மறைகிறார்)

இடையர்கள் மூவரும் :

வானவர் ஆடி, ஆயர்கள் கூடி,
வாழ்த்துக்கள் கோடி கூறினார்கள் பாடி
ஆனந்தமாக ; அக்களிப்பாக
நாமுமே சேர்ந்து பாடிடுவோம் வாரீர்

(மூவரும் பாடிக்கொண்டு தமது மந்தைகளுடன் யேசுவைக் காண போகின்றார்கள்.)

முடிவு

K. ராஜகோபால்,
நெடுந்தீவு.

---

சக்தி

ஏன் நமக்குச் சுதந்திரம் தேவையென்றால் உரிமையைச் செலுத்துவதற்கும், கடமையை நிறைவேற்றுவதற்கு மேயாகும். ஆகவே இந்தச் சுதந்திரத்தை நாம் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நல்லவற்றைச் செய்வதற்குரிய பல சாதனங்களில் சிலவற்றையாகிலும் தெரிந்தெடுத்துக் கொள்ளுகிற சக்தி நமக்கு ஏற்படும். — மாஜினி.




# கிறிஸ்து பிறப்பாரா ?

திருச்சபையில் திருவிழாக்களுக்குப் பஞ்சமேயில்லை. கிறிஸ்துவுக்குப் பெருவிழா, மரியன்னைக்கு விழா, புனிதர்களுக்குத் திருவிழா என்றெல்லாம் ஆண்டு முழுவதும் விழாக்கள்! விழாக் கொண்டாட்டங்கள்.

மார்கழித் திங்கள் பிறப்பதற்கு முன்னரே ஒளிவிழாக் கொண்டாட்டங்கள், கிறிஸ்து பிறப்பை மீட்பரின் வருகையை நினைவு கூரும் விழா உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. கிறிஸ்மஸ் குடில், கிறிஸ்மஸ் வாழ்த்து, கிறிஸ்மஸ் கேக் என்றெல்லாம் எத்தனையோ...... !

விழாக்கள் மலிந்துவிட்டமையால் விழாவின் உட்கருத்தை மறந்து விட்டோமா? வெளிக் கொண்டாட்டங்களில், கிரித்தியங்களில் மட்டும் கவனம் செலுத்தி விழாவின் செய்தியைப் பெற மறுக்கிறோமா?

ஒரு விழாவிற்கு, விழாத் தரும் செய்தியே முக்கியம். கிறிஸ்து பிறப்பு விழா ஒளியையே படைத்தவன் ஒளியாக இவ்வுலகிற்கு வந்த விழா இருளில் வாழ்ந்த மக்களுக்கு வழி காட்டிய விழா. அறியாமையால் இடறல் பட்டுக் கொண்டிருந்த மக்களுக்கு அறிவு என்னும் ஒளியைக் கொடுத்த விழா. மனிதன் அல்ல, சட்டமும், சம்பிரதாயமுமே முக்கியம் என்று வாழ்ந்த சமுதாயத்தின் மூடக்கொள்கைக்கு முழுக்குப் போட்டு மனிதத் தன்மை, மனித மதிப்பீடுகளே முக்கியம் என மக்களுக்குணர்த்திய விழா – கிறிஸ்து பிறப்பு விழா.

"இருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டனர்; மரண நிழல் படும் நாட்டில் உள்ளோர்க்கு ஒளி உதித்துச் சுடர் வீசிற்று" என்கிறார் இறைவாக்கினர் இசையாஸ்.

கிறிஸ்து பிறப்பைக் கொண்டாட ஆலயம் தோறும் பாலன் குடில் அமைக்கிறோம். ஆலயங்களில் உள்ளது போதாது என நம் இல்லங்களில் அமைக்கிறோம். ஏன்? சிலர் தெருச் சந்திகளிலும் அமைக்கிறார்கள்.

கிறிஸ்து பிறப்பு விழா நள்ளிரவுத் திருப்பலி முடிவடைந்ததும் பாலன் குடிலுக்குப் படையெடுப்பார்கள் நம்மவர்கள். காணிக்கை போட வேண்டும். பாலனைத் தொட்டு மன்றாட வேண்டும் என்ற அவதியினால் வயோதிபர்களை நெருக்கியடித்துக் கொண்டும், குழந்தைகளை மிதித்துக் கொண்டும் பாலன் குடிலை நோக்

கிப் பாய்வார்கள் ஒரு சிலர். இச் சடங்கிலே ஒரு சிலருக்குப் பரம திருப்தி இது ஒரு கலையும் கூட.

கிறிஸ்துவைக் காணப் பாலன் குடிலுக்குப் படை எடுக்கும் நம் சமுதாயம் தங்கள் குடும்பத்திலே கிறிஸ்துவைக் கண்டதா? கட்டிய கணவனிலே கடவுளைக் காணுமல்; மனைவியில். பெற்ருேரில். பிள்ளைகளில், அயலவர்களில் கிறிஸ்துவைக் காணுமல் பாலன் குடிலில் கிறிஸ்துவைக் காண முடியுமா? பெற்ற பிள்ளைகளை அரவணைக்க மறுத்து, முத்தம் கொடுக்க மறுத்து பாலன் குடிலில் காணப் படும் ஆடுகள் மாடுகளின் சிலைகளுக்கு முத்தம் கொடுக்கிருர்களே நம்மவர்கள் இதுதான் விழாக் கொண்டாட்டமா?

நம் பிள்ளைகள், நம்மயலவர்கள் உண்ணவழியில்லாமல் பசியால் பட்டினியால் வாடி வதங்கும் வேளையில் பாலன் குடிலில் காணிக்கை போடுகிறது ஒரு கும்பல். "நான் பசியாக இருந்தேன், எனக்கு உண்ணக் கொடுத்தீர்கள்" என்ற இயேசுவின் வார்த்தையை இவர்கள் மறந்து விட்டார்கள் போலும்.

"கடவுள் மக்களைப் படைத்தார்; மக்கள் 'கடவுள்களை'ப் படைத்தார்கள், படைக்கிருர்கள்" என்று கூறினுர் பேரறிஞர் ஒருவர். தாங்கள் அமைத்த குடிலில் கடவுளைக் காண்கிறதாகச் சொல்லி திருப்தியடைகிறது ஒரு சமுதயம்.

"எளியோருக்கு நற்செய்தி சொல்லவும், சிறைப்பட்டோர், விடுதலையடைவோர், குருடர் பார்வை பெறுவர் என அறிவிக்கவும், ஒடுக்கப்பட்டோர்க்கு உரிமை வாழ்வு வழங்கவும்" இவ்வையகம் வந்த கிறிஸ்துவுக்கு விழாவெடுக்கிருேம். இவ்வேளையில் ஏழைகளையும் குருடர்களையும், சிறைப்பட்டோரையும், அடக்கப்பட்டோரையும் நாம் மறந்தால் நமக்கு விழாவேது? நம்மில் ஒளியேது?

கிறிஸ்து பிறப்பு விழா—ஏழ்மையின் பெருவிழா. இறைவன் ஏழ்மையுருவில் ஏழையாக, ஏழைத் தச்சுத்தொழிலாளியின் குடும்பத்தில் அவதரித்த விழா. ஏழைகளான இடையர்களுக்குத் தான் இச்செய்தி முதலில் அறிவிக்கப் படுகிறது.. கிறிஸ்து பிறப்பு விழா—தொழிலின் மேன்மையை உலகிற்குக் காட்டும் உழைப்பாளியின் விழா.

உத்தியோகம் வேண்டும்; வெளிநாடு செல்லவேண்டும்; பொன்னையும் பொருளையும் தேட வேண்டும் என்று துடிக்கிறது இன்றைய சமுதாயம். உத்தியோக மாப்பிள்ளை தான் வேண்டும். 'பெல்ஸ்' போட்ட வெளிநாட்டு மாப்பிள்ளை தான் வேண்டும் என்று கோஷிக்கிறது இன்றைய சமுதாயம். காசேதான் கடவுளடா என்று பாடி இப்பணத்தைப் பெற அநீத வழிகளில் சென்று கொண்டிருக்கிருர்கள் மக்கள் சிலர்.

மனித மதிப்பீடுகளை மறந்த இவர்களுக்கு இவ்விழா வழிகாட்டுமா? இவர்கள் உள்ளத்தில் உள்ள அறியாமையை இவ்விழா அகற்றுமா? மூடக் கொள்கைகள் மறைந்து இவர்கள் உள்ளத்தில் புது வாழ்வு வாழ நம்பிக்கை ஒளிருமா? கிறிஸ்து இங்கே பிறப்பாரா?

ஆ. சிங்கராயர், அ. ம. தி,

# வணங்கி வாழ்ந்திடுவீர் !

ஏ. பி. வி. கோமஸ்

ஞானகம் வாழ்ந்த கடையரை மீட்க
கடவுளும் மனிதரானார்
வானகம் விட்டு வையகம் வந்து
வைக்கோல் மேலுதித்தார்
ஏன்அகம் இன்னும் மாறவும் இல்லை
ஏன் ஏன் மனிதர்களே ?
தேன் அகம்விரிந்தால் தேவனும் தானாய்
தேடியே வந்துறைவான் !

மானுடம் செய்த மாபவம் போக்க
மண்ணகம் வந்துதித்தார்
மாயிடம் வாழ்ந்த மனிதரும் இங்கே
மகிபன் அனுமதித்தார்
வீணிடர் பட்டு வீழ்ந்து விடாது
விண்ணகம் செல்ல வேண்டில்
வானிடம் காணும் வழிகளைப்பற்றி
வல்லானை வணங்கிடுவீர் !

மாண்புடை வாழ்வை மன்பதை காண
மாபரன் தொழுதிடுவீர்
வீணகம் பாவம் விழாப்போட்டிப் பொறாமை
விரசக் காமமுடன்
ஊனுடல் பேராசை ஊழலும் பொய்களவு
உதிரக் கொலையுடனே
தான்விலக்கிப் பிறரைத் தமராய்க் கொண்டு
தரணியில் வாழ்ந்திடுவீர் !

# மங்கையர் திலகம் அன்னை தெரேசா

(சாமுவேல் பெனடிக்ற்)

கல்கத்தாவில் அநாதர்சாலை ஒன்றில் ஆருமற்ற வயோதிபன் ஒருவன் மரணவாயிலில் துடித்துக் கொண்டிருந்தான். அவன் படும் வேதனையால் சோதனையுற்ற கன்னியொருத்தி, மருத்துவ நிபுணரிடம் ஓர் குறிப்பிட்ட மருந்தின் பெயரைச் சொல்லி அதை ஊசிமூலம் பாய்ச்சுமாறு கூறினுள்.

"சிஸ்டர் விலைபெற்ற அந்த மருந்தை ஆருமற்ற, இறந்து கொண்டிருக்கும் இந்த ஏழைக்கு ஏற்றுவதனுல் என்ன பயன்?" என்று கேட்டார் மருத்துவர்.

"டாக்டர் இவன் கடவுளின் சிருஷ்டிப்பில் உருவானவன். எனவே, என்னுடையவும் உங்களுடையவும் சகோதரன்" என்ருள் கன்னிகை.

மருத்துவர் ஒருகணம் சிந்தித்தார். அடுத்தகணம் அவரது கரங்கள் ஊசிமூலம் மருந்தைப் பாய்ச்சின. வேதனையால் துடித்துக் கொண்டிருந்தவன் அமைதி பெற்ருன்.

நன்றிப்புன்னகையுடன் கன்னிகையை நோக்கி அவளது கரங்களை எட்டிப் பிடித்தான். அடுத்த நிமிடம் அவனது ஆவி அமைதியாக விடுபட்டது.

அந்தரித்த, ஆருமற்ற ஆயிரக்கணக்கான ஏழைகள் மரணப் படுக்கையிலாவது இவ்விதம் மனுஷீக அன்பைப் பெறக் காரணமாக அருட்கரம் நீட்டிவரும் கன்னிகை யார்?

கல்கத்தாவின் சேரிகளிலே அகதிகள், ஏழைகள், அனுதைச் சிறுவர்களால் அன்னை என்று அன்போடு அழைக்கப்பெறும் கன்னிகை தெரேசாதான். அண்மையில் இவ்வாண்டுக்கான சமாதானப்பரிசை இந்த அம்மையாருக்கு அளித்ததன் மூலம் 'நோபல் பரிசு' தன்னையும் உயர்த்திக் கொண்டது.

---

**விழாவின் பொருள்**

கிறிஸ்து பிறப்பு விழாவுக்குப் பொருளுண்டு என்ருல், அப்பிறப்பு இன்று குடிலில் அல்ல, கோயிலில் அல்ல, வழிபாடுகளில் அல்ல; ஆனுல், வாழ்க்கைப் பிரச்சனைகளில் வீழ்ந்தவர்களைத் தூக்கிவிடுவதில், நொந்தவர்களை ஆறுதல்படுத்துவதில் வாழ்க்கையில் பாதிக்கப்பட்டவர்களை மீட்பதில் கிறிஸ்து பிறப்பார்.

— கரவையூர்ச் செல்வம்.

---

எழுபதாண்டுகளின் முன் யூகோ சிலாகியாவின் அல்பேனியப் பெற்றோருக்குப் புதல்வியாகப் பிறந்தாள் ஆக்னெஸ். பாடசாலையில் படித்துக்கொண்டிருக்கையில் மரியாள் பக்திச் சபைக் கூட்டங்கட்குச் செல்வாள். பாரதநாட்டில் மறைபரப்புப் பணியில் ஈடுபட்டிருந்த யேசுசபைக் குருக்கள், இந்தியாவின் நிலைமைபற்றி எழுதும் கடிதங்கள் இக்கூட்டங்களில் வாசிக்கப்படும்.

இக்கடிதங்களால் உந்தப்பட்ட சிறுமி ஆக்னெஸ் தனது பன்னிரு வயதிலேயே துறவறம் பூண்டு இந்தியா சென்று ஏழைகட்குப் பணிசெய்ய விரும்பினாள், எனினும் ஆறு ஆண்டுகள் காத்திருக்க வேண்டியதாயிற்று.

பதினெட்டாவது வயதில் அயர்லாந்து சென்ற ஆக்னெஸ், லொறற்றோ கன்னியர் சபையில் இணைந்து கொண்டாள். அடுத்து கன்னி தெரேசா (ஆக்னெஸ்) கல்கத்தாவுக்கு அனுப்பப்பட்டாள்.

ஒரு கல்விச்சாலையில் பூகோள ஆசிரியையாகப் பணியாற்றத் தொடங்கியவள் சில ஆண்டுகளின் பின் மரியான் கல்லூரியின் அதிபராகப் பதவியுயர்வு பெற்றாள்.

கல்கத்தாவில் ஆசிரியப்பணி புரிந்த இருபதாண்டுகளிலும் கன்னி தெரேசா பெற்ற அனுபவங்கள் கசப்பானவை. அவளது உடலையும் உள்ளத்தையும் உலுப்பிவிட்ட பல நிகழ்ச்சிகளை கண்ணாரக் கண்டாள்.

தினசரி பாடசாலை செல்லும் போது வீதியோரங்களில் அனாதரவாக விடப்பட்ட பிஞ்சுக் குழந்தைகள் ஆதரவும் அன்பும் கோரித் தம் பிஞ்சுக் கரங்களை அவளை நோக்கி நீட்டும்.

அசுத்தமான சேரிகளில் தொழு நோயின் வேதனையால் துடிக்கும் அருவருப்பான நோயாளிகள் அவளை ஏக்கத்துடன் நோக்குவர். பசியால் துடிக்கும் குழந்தைகளின் ஓலம் அவள் செவிகளை வாட்டும்.

எங்கு சென்றாலும் அவள் கண்டது பஞ்சம், பசி, பட்டினி, அசுத்தம், அருவருப்பு, ஏழ்மை.

**அன்பு**

அன்பு ஒரு தங்கச் சங்கலி போன்றது. அதை அறுமல் நாம் பாதுகாக்க வேண்டும்.

வாழ்வில் மிகச் சிறந்த இன்பம் நாம் மற்றவர்களால் அன்பு கூரப்படுகின்றோம் என்பதே. அன்பு நீடிய சாந்தமும், பொறுமை உள்ளது.

அன்பு என்ற மூன்றெழுத்தால் நாம் இந்த அவனியையே ஆளலாம்.

அன்பின் குணங்கள் கோபம் அற்றது. எதையும் ஈயும் தன்மை கொண்டது. எவரையும் வசப்படுத்தும் குணம் கொண்டது

அன்பு ஒவ்வொரு மனிதனிலும் சுரந்தோடும் ஜீவ நதி.

செல்வி மீரா. வ.

தனிமை, அனுதரவு, பயங்கர நோய்கள், அவள் கேட்டது வேதனைக்குரல்கள்.

இந்த அனாதைகட்குத் தேவையானது அன்பு—ஆதரவு என்பதைத் தெரேசா நன்குணர்ந்தாள். பூட்டப்பட்ட மதிற்சுவர்கட்குள் பாதுகாப்புடன் வசித்து, வேளா வேளைக்கு உணவருந்திக் கொண்டு பிரார்த்தனையிலும், தியானத்திலும் துறவறம் செய்வதைவிட இத் துர்ப்பாக்கிய ஜீவன்கட்கு அன்பு செய்வது, ஆதரவு காட்டுவது, ஆண்டவனுக்கு அதிகம் உவப்பானதாயிருக்கும் என முடிவு செய்தாள்.

1946-ல் ஆண்டவனின் அழைப்பை ஏற்றுத் தனது புதிய வாழ்வை ஆரம்பித்தாள் அன்னை தெரேசா. அவள் அடியிட்ட தரும சகோதரத்துவ நிறுவனத்துக்கு அருளாசி வளங்கினுர் திருத்தந்தை பன்னிரண்டாம் பத்திநாதர்.

கல்கத்தாவின் சேரிகளில் அன்னையின் அன்புப்பணிகள் ஆரம்பமாயின. நீலக்கரைபிடித்த வெள்ளைச் சேலையணிந்த அன்னையின் படையணியினர் வீதிகளிற் கிடந்த குழந்தைகளுக்குப் புகலிடம் தந்து பராமரித்தனர்.

தொழுநோயாளர்களின் அரோசிகம் நிறைந்த புண்களைப் புன்னகையோடு கழுவித் துடைத்து மருந்து கட்டிவர் ஆருமற்ற அனாதைகள் உணவு, உடை, உறைவிட வசதிபெற்றனர்

ஏழைகளோடு ஏழைகளாக உணவிலும், உடையிலும் உள்ளத்திலும், செயலிலும் மாறிய அன்னை தெரேசாவும் சகோதரிக

---

# “புதிய உலகத்தின் புதுவருட அன்பளிப்பு”

1980 தை — மாசி இதழில் இருந்து “புதிய உலகத்தில்” வெளியாகும் தரமான சிறுகதைகளுக்குச் சன்மானம் வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை அறியத் தருகின்றோம்.

— வெளியீட்டாளர்.

ளும் ஏழைகளின் சிரிப்பில் கிறிஸ்து வின் புன்னகையைக்கண்டு மகிழ்ந் தனர்.

அன்னையின் அன்புப்பணிகள் அகிலத்துலகுக்கும் தெரிய வந் தன. அன்னைக்கு உதவுவதற் கென பலநாடுகளிலும் "அன்னை தெரேசா அறச்சாலைகள்" நிறு வப்பட்டன.

பாப்பரசர் ஆறுவது சின்னப்பர் பாரதநாட்டுக்கு வருகை தந்த போது சுற்றுப்பயணம் செய்வ தற்கென ஜேர்மானிய பிரமுகர் கள் விசேட பென்ஸ் மோட்டா ரொன்றை அன்பளிப்புச் செய் திருந்தனர். பாப்பரசர் பாரதத் தைவிட்டுச் செல்லும்போது அன் னைக்கே இவ்வண்டியை வழங்கி னர்.

"ஏழைக்கு எதற்கு ஆடம் பர வாகனம்?" என்று கூறிய தெரேசா அம்மையார், பென்ஸ் வண்டியை ஏலத்தில் விற்று அப் பெருந்தொகையை ஏழைகளின் பணியில் செலவிட்டு இன்பம் கண்டார்.

அன்னையின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டிப் பல நாடு களும் நிறுவனங்களும் பொற்கிழி கள் தந்து தம்மையே பெருமைப் படுத்திக் கொண்டன. இவ்வகை யில் 23-ம் அருளப்ப தந்தை நினை வுப்பரிசை அன்னைக்கு வழங்கிய போது திருத்தந்தை ஆறுவது சின்னப்பர் நிகழ்த்திய உரை கருத் தாழம் மிக்கது.

"உலக அமைதிக்காக உழைப்ப வர்கள் பலர். ஆயின் அந்த அமைதி எவ்விதம் பெறப்பட லாம் என்ற இரகசியத்தை அவர் கள் தெரிந்து கொள்ளவில்லை."

"ஏழைகளின் துயர் துடைக்கும் பணியில் தங்களை முழுமையா கவே அர்ப்பணித்து ஓய்வொளி வின்றி உழைத்துவரும் தெரேசா அம்மையாரும் அவர் தம் தொண் டர்களும் அவ்விரகசியத்தை நன் கறிவர்."

பரிசுத்தமான அன்புச் செயல் கள் கல்கத்தாவின் சேரிகளில் நடத்தப்படுவது கண்டு தங்கள் நாடுகளிலும் இச்சேவையை ஆரம் பிக்குமாறு பல பின்தங்கிய நாடு கள் அம்மையாருக்கு விடுத்த வேண்டுகோளின் பயனாக இருபத் தாறு நாடுகளில் தெரேசாவின் தொண்டர்கள் பணியாற்றுகின்ற னர்!

நோபல் பரிசாக ஒரு லட்சம் பவுண்கள் தரப்படும் என்ற செய்தி அறிந்தவுடன் இந்த அம்மையார் மிகப் பணிவோடு கூறினார்: "இப்பரிசுக்கு நான் தகுதியற்றவள். ஆயின் எனது ஏழைகளின் நலன் கருதியே இதனை இறைவன் வழங்கியுள் ளார்."

அன்னை தெரேசாவும், அவரது தொண்டர்களும் அடிக்கடி செய் துவரும் பிரார்த்தனை, அசிஸி நகரத்துப் புனிதர் பிரான்சிஸ் உருவாக்கிய சாந்தி மார்க்க ஜெபம்தான்.

"இறைவா உந்தன் சாந்தியை உலகில் பரப்புமோர் கருவியாக என்னை ஆக்கிடுவாய்......"




# பாலகனுய் வந்துதித்த பரமன் யேசு காட்டிய வழி

மார்கழி மாதம், நள்ளிரவு நேரம், பௌர்ணமி இரவு விண்மீன்கள் கண்சிமிட்டிக் களிநடம் புரிந்துகொண்டிருந்தன. நடுங்கும் குளிர்; பலஸ்தீன் நாட்டிலே பெத்லகேம் என்ற ஊரின் வெளிப்புறம்; ஆடு மாடுகள் வந்தடையும் பாழடைந்த கொட்டிலிலே ஒரே நிசப்தம்; திடீரென வான மண்டலத்திலிருந்து வானவர் வாத்திய முழக்கம் கேட்கின்றது.

"உன்னதங்களில் கடவுளுக்கு மகிமையும் பூவுலகில் நல்மனத்தோர்க்குச் சமாதானம் உண்டாவதாக" என வான தூதர்கள் பாடுகின்றனர்.

ஆம். அமலன் யேசு அவதரித்து விட்டார். பாவமாசு அணுகாத மாமரி வயிற்றிலிருந்து பாரோர் பாவம் போக்க பாரினில் பாலகனுய் அவதரித்து விட்டார். மனுக்குலத்தின் அன்பால் மனுவுருவான மனுமகன் மாட்டுத் தொழுவத்திலே பிறந்து விட்டார். பாலனின்முகமோ; வைரம், வைடூரியம், மாணிக்கம், மரகதம் முதலாம் விலையுயர்ந்த கற்களின் ஒளியைத் தோற்றுவிக்கும் கதிர் வீசி விளங்கியது.

மூவா முதல்வனை ஈன்ற அமலி மரியாள் மண்டியிட்டு நின்றுகொண்டிருக்கிருள்; மலர்க்கொடியோன் சூசை மாமுனிவர் அமலனைச் சிரம் தாழ்த்தி வணங்கி நிற்கிருர்; ஆயர் பலர் அரசர் அருகே அடிபணிந்து நிற்கின்றனர். மாமன்னர் தோன்றினதற்கு மகிழ்ச்சி தெரிவிக்கின்றன ஆவினங்கள்.

பண்பிழந்து, மேலோர் எனத் தங்களைக் கூறும் மனிதர்களே பாரீர்! விண்ணவர் வேந்தன் மாடமாளிகையில் பிறக்கவில்லை; பஞ்சு மெத்தையில் படுக்கவில்லை; பட்டாடை அணியவில்லை; ஊழியர்கள் இருக்கவில்லை.

உனது எளிமையையும் தரித்திரத்தையும் ஆண்டவர் அணைத்து நேசிக்கிறார். இறைவனே தரித்திரத்தை மேற்கொண்டார் என்றால், நாம் ஏழைகளாய் இருப்பது குறித்து, கடவுளைக் குறை கூறுவது அழகல்ல; அதற்கு மாறாக எம் நிலையைக் குறித்துச் சந்தோஷப்படுவதே மேல்.

இவ்வுலகத் துன்பத்தையும், தோல்வியையும், சோர்வையும் கண்டு கலங்காது, அவற்றின் மத்தியிலும் நாம் சலனமின்றி வாழ முடியும், வாழவேண்டும் என்று மனிதனுக்கு அவர் வழி காட்டினார்.

கடவுளிடம் நம்பிக்கை வைத்து வாழ்வதுதான் வாழ்வு என்பதை யேசு பெருமான் வலியுறுத்தினார். இறைவனின் கருணை அளவில்லாதது, அதை நம்பியவர் ஈடேறுவது உறுதி என்றும் கூறினார்.

இந்த நம்பிக்கையின் அடையாளம் எல்லா மனிதரிடத்தும், பகைவரிடத்தும் அன்பு காட்டுவதே என்று பகர்ந்தார். இப்படியான உயர்ந்த தத்துவங்களை நமக்குப் படிப்பிக்கவே பரமன் இப்பாரினில் பாலகனாய்ப் பிறந்தார்.

பிரான்சிஸ்கா பெனடிக்ற்,
யாழ்ப்பாணம்.

## விரட்டியடி வெளியே

ஜேர்மன் பேரரசர் பிரட்ரிக் வில்லியம் ஒருநாள் போஸ்டாம் நகரத்தில் உள்ள சிறைச்சாலைகளைச் சுற்றிப் பார்வையிட்டுக் கொண்டு வந்தார். கைதிகள் எல்லாரும் தாங்கள் நிரபராதிகள் என்றும் தம்மை விடுதலை செய்யுமாறும் கெஞ்சிக் கேட்டனர். கைதிகளில் ஒருவன் மட்டும் அமைதியாக இருந்தான். அரசர் அவனிடம் கேட்டார்: "ஏனப்பா நீ நிரபராதியில்லையா?" என்று. "இல்லை நான் குற்றம் புரிந்தவன். செய்த குற்றத்துக்காகத்தான் தண்டனை அனுபவிக்கின்றேன் என்று பதில் வந்தது. உடனே அரசர், "இந்த அயோக்கியனை வெளியே விரட்டி அடியுங்கள்; இவன் இங்கிருந்தால் நல்லவர்களைக் கெடுத்துவிடுவான்" என்று சிறை அதிகாரிக்கு ஆணையிட்டார்.

# ஓரம்
# போ!

கூடி வாழ்ந்திருக்கும் — ஒருகுலத்து மக்களிடை
சாதி சொல்லிப் பிரிக்கின்ற
சண்டாளன் வருகின்றான் ........ ஓரம் போ!

நீதி நியாயங்களை — வாழ்வில் மறந்துவிட்டு
வாரிச் சுருட்டிக்கொள்ளும்,
வணிகன் வருகின்றான் ............ ஓரம் போ!

பணிகள் பல கிடந்தும் — துணிவில்லாக் காரணத்தால்
தூங்கி வழிகின்ற,
சோம்பேறி வருகின்றான் .......... ஓரம் போ!

பக்திப் பகல்வேஷம் — போட்டுப் பக்தனென
சக்தித் தெய்வமதன்,
சந்நிதிக்கு வருகின்றான் ............ ஓரம் போ!

காதலித்துக் கைப்பிடித்து — "காரோடு" வீடு பணச்
சீதனப்பேய்போலே,
சீ!... மானங்கெட்டவன் வருகின்றான் ....... ஓரம்போ!

தூயவன் என்று ஒரு — போர்வையில் வாழ்ந்துகொண்டு
சேவையை மறந்தவன்,
சேர்ந்தே வருகின்றான் .......... ஓரம் போ!

தேர்ந்தோர் கட்சியில் — தெரிவாகித் தேவைக்கு
சார்ந்தோர் கட்சியில்,
தார்மீகம் (சத்தியம்) பேசுகின்ற,
சதிகாரன் வருகின்றான் .......... ஓரம் போ!

வாழ்ந்தோர் காட்டிய — வழிமுறைப்படியுந்தன்
வாழ்வினையமைத்திட,
வழிவிட மாறுப்பவன் வருகையில் ........ ஓரம் போ!

— ச. ம. கண்ணன் —



# பாலகன் தோன்றியது எமக்காகவா?

இப்பரந்த உலகினிலே எத்தனையோ கோடான கோடி மக்கள் பிறந்தார்கள். பிறந்து கொண்டிருக்கின்றார்கள். அதே போலவே யேசுக்கிறிஸ்துவும் பிறந்தார். இவ் உலகிலே எந்தவொரு மனிதனும் பெறாத கண்ணோட்டத்தை இவர் பெற்றார். ஆம், உலக மீட்பர் என்ற பட்டத்தை யேசுவைத் தவிர வேறு எவரும் பெற்றிருக்க முடியாது, பெறவும் முடியாது. காரணம், அவர் ஒரு தியாகி. தன்னையே உவந்தளித்த உத்தமர்; அவருடைய பிறந்த தினத்தை ஞாபகமாக வைத்துக்கொண்டாடும் இக்கிறிஸ்மஸ் பெருவிழா மிகப் பொருந்தும். "நாமும் யேசுவைப் போல மனிதர்கள்தானே! ஏன் எம்மை மற்றவர்கள் போற்றி இவ்விதமாகப் பெருவிழா கொண்டாடக் கூடாது" என்று நாம் கேட்போமானால் எம்மைப் போன்ற முட்டாள்கள் இப்பரந்த உலகத்தினிலே இருக்க முடியாது. காரணம் இதுதான் அந்த வினாவிற்குக் கிடைக்கும் விடை யேசு ஒரு தியாகி, உத்தமன், ஆனால் நாமோ பாவிகள், பாவக்கறை படிந்த பாவிகள், எம்மை மீட்பதற்கே அவர் தோன்றினார். தியாகத் தீபமாக அவர் இவ்வுலகிலே எமக்காக எம்மை மீட்பதற்காகத் தோன்றினார். இதனாலே இவ் விழா பொருந்தும் மிகப் பொருந்தும். மந்தைகளின் மத்தியில் ஓலைக் குடிசையில் பிறந்துள்ள அப்பாலனைப் பார்! அன்பொழுகும் அன்பு முகத்தைப் பார்! கருணை பாயும் கருணை முகத்தைப் பார்! உன்னை நோக்கி நிற்கும் அவ்விரு கண்களைப் பார். கண்கள் கதை பேசுகின்றனவா? உன்னிடம் ஏதோவொன்றைச் சொல்லத் துடிக்கவில்லையா? அழகிய வதனத்தைப் பார், அது உன்னிடம் ஏதோ கூற முயலவில்லையா? ஆமாம் அதன் வாய் அசைகிறது, வதனம் மலர்கின்றது, அது உன்னிடம் கூறுகிறது.

"நான் உனக்காகவே பிறந்துள்ளேன்." உன் உள்ளக் கதவுகளிலே இவ்வார்த்தை மட்டும் எதிரொலிக்கின்றதா? சொல்-சொல்-ஏன் தயங்குகிறாய்? ஒரு பாவி. பாவத்திலே மூழ்கிப் போன பாவி, எப்படி உனக்கு அவ்வார்த்தை கேட்கும் வாழ்நாளிலே அவ்வார்த்தை உன் உள்ளக் கோயிலிலே எதிரொலிக்காதா? உனக்காகப் பிறந்த அப்பாலனினால்தான் பதில் கூற முடியும்.

நன்றி.

ஜி. மசனெட்,
அடம்பன்.

சிறுகதை

# ஊசிமுனையில் ஒட்டகம் நுழைந்தாலும்....

அந்தத் தெருவோரத்து மரத்தடியில் பலகையால் ஆன ஆசனம் அதில் அமர்ந்து அன்றைய ஊர்வம்பை ஆரம்பித்துக் கொண்டிருந்தார் அய்யாப்பிள்ளை. அவர் ஊரில் வசதியானவர் ...... வரட்டுக்காணி யென்ன? வளமாக விளையும் காணியும் அந்த ஊரில் தமதாக்கிக் கொண்டவர். எங்கே எப்பொழுது எப்படி எதைச் செய்ய வேண்டுமென்ற கலையறிந்தவர் அய்யாப்பிள்ளை. வான் மழையை நம்பியே வாடுகின்ற கிராமம் அது; அதனுல் வரட்சிக் காலங்களில் பஞ்சம் பலரையும் பாதிப்பதுண்டு.

யாழ் நகர்ப்புறத்திலின்று அரசாங்க ஓய்வுபெற்ற ஒய்வூதியர். அவரின் மனைவி அங்கிருப்பினும், இங்குமோர் இல்லக்கிளத்தி, பொழுது போக்காக கமம் செய்ய வந்தவர் நாளடைவில் வன்னி ஈழத்திலேயே குடியாயமர்ந்து விட்டார். அரிசிக்குத் தடையேற்பட்டபோது தன்னிடமுள்ள அரிசியைத் பகிர்ந்தார்; ஆனுல்...! அது அருவிலை... யென்பார்களே, அதன் பெயரால், பணம் கொடுத்தார் பலருக்கு .. பயிர் செய்வோருக்குப் பசளை முதல் பலதும் கொடுத்தார், பலன் அவர் பக்கமிருந்தது. பயிர் விளைந்தோரிடம் பணம் ஒன்றுக்கு மூன்ருக அறவிட்டார். பயிர் விளையாதோரிடம் பணம் சிறிது சிறிதாகக் கொடுத்துப் பெரிதாகக் காணியுறுதிகளைத் தன் பெயரால் எழுதிக்கொண்டார். எங்கெங்கு எந்தெந்தக் கலைகளைப் பாவிப்பதென்பது இவருக்குக் கை வந்த கலை. இவரைத் துதிபாடுவோருக்கு இவர் தேவதூதன். எதிர்த்து நிற்போருக்கு எதிரி. அது பகிரங்கமாக வல்ல பரனுக்கே தெரியாத முறையில் சாதித்துக் கொள்வார்.

இந்த வேளையிலே பல குடும்பங்கள் பாதிப்புற்று வந்தது அக்கிராமத்திற்கு. அளர்கட்குச் சில நல்ல தமிழ் இளைஞர்களால் தொண்டு முறையில் உதவி செய்யப்பட்டது. ஆனுல், இளைஞர்களின் உதவிப்பகுதிக்காணி தமதென்று வாதாடினுர். இளைஞர்கள் அல்லல்பட்ட மக்களுக்கே எனறனர்.

எதிர்ப்பு மறைமுகமாகிச் சிறை உறைவிடமாகி இளைஞர் பிரிந்து விட்டனர்.

இந்நிலையில் அன்று அந்தப் பகுதியில் உள்ள புனிதர் ஒருவரின் கோயிலுக்குப் போன இளம் மங்கை திடீரென மயங்கிய நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டாள். அதைத்தான் விமர்சித்துக் கொண்டிருந்தார். " தம்பி...... உந்தத் தரவளி ..... பெட்டையள் கட்டைக் கவுண் போட்டுக் கொண்டு உங்க கோயிலுக்கே போகுதுகள், உந்தப் பெட்டையளோட இன்னும் மூன்டு பெட்டையள் நிற்குதுகள், அண்டைக்கும் நான் பஸ்ஸில வரக்கை கண்ட ஒரு பெடியனோட சிரிச்சு, கும்மாளம் போட்டு முசுபாத்தியோட வந்தவ. அதுதான் தெரியாதே...... என்று கண்ணைச் சிமிட்டி மற்றவரிடம் கூறிக் கொண்டிருந்தார். உண்மையில் அவர் பையனைக் கண்டதுமில்லை. யாரையும் கண்டதுமில்லை, நம்பகமாகச் சொல்லி நம்ப வைத்து விடுவார்.

இவர் இப்படிக் கூறிக்கொண்டிருந்த போதே ஒரு வெள்ளை நிறக்கார் அவர் இடத்தில் வந்து நின்றது. அவர் வீட்டை அடையாளம் காட்டச் சண்முகம் என்ற இளைஞனும் வந்திருந்தான். அவன தான் கோயிலில் மயங்கிய இளம்பெண்ணை வைத்தியசாலையில் அநுமதித்து விட்டு வந்தவன். காரில் வந்தவர் சொன்னது ஆங்கிலத்தில், ஆனால் சண்முகம் புரிந்து கொண்டான். அய்யாப்பிள்ளையின் ஒரே அக்காவின் மகள் ஒரு ஆசிரியை; அவளின் காதலன் வேறு பெண்ணை மணந்துகொண்டானாம். அவன் தந்த பரிசு அவமானச் சின்னமென்று தற்கொலை செய்யப்போய்க் கருச்சிதைவுடன் தப்பிவிட்டாளாம். அவனை இங்கு கொண்டுவந்து நிறுத்த வேண்டுமென்பதே.

இதை அய்யாப்பிள்ளை வம்பளந்து கொண்டிருந்தவரிடம் போகும்போது சண்முகம் கூறியபடி சென்றான். அதே நேரம், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அந்த இளம் பெண் பசிகொடுமையால் பாடாவரை என்னும் அவரையினக்காயை அவித்துச் சாப்பிட்டதாலும் அத்தோடு மலேரியாக் காய்ச்சலினாலும் மயக்கமும் வாந்தியும் வந்து மயங்கி விழுந்தாளென்பதை விளக்கினான்.

அய்யாப்பிள்ளையிடம் கதை கேட்டவர் சொன்னார்: " ஊசி முனையில் ஒட்டகம் நுழைந்தாலும் பணக்காரனுக்குப் பரலோக இராச்சியமில்லை என்பது உண்மையாகும். இல்லாவிட்டால்" என்று எதையோ சொல்ல வந்தவர், வெற்றிலையைச் சப்பித் துப்பினார். அந்த வெற்றிலை அய்யாப்பிள்ளை தந்தது. அவர் சொல்ல வந்தது, அய்யாப்பிள்ளையின் ஊர்வம்பின் பிரதியாக்கமே,

(யதார்த்த கற்பனை)

— தமிழ் ஈழவன்

# எல்லாம் மன்னித்த மன்னனல்லவா!

உள்ளம் உருகுதப்பா — இறைவா
ஊனும் கரையுதப்பா
வள்ளல் உமை நினைந்தால் — எந்தன்
வாயும் இனிக்குதப்பா.

அங்கைகளில் ஆணி — அடிக்க
அவஸ்தைகள் பட்டாலும்
எங்கள் பாவங்கள் போக்க — என்றும்
இடர்பல உற்றவரே.

கஷ்டப் படுபவர்க்கே — நீர்
கண்கண்ட தெய்வமப்பா
குஷ்டத் துளன்றேனே — அன்பாய்க்
கூட்டிய தெய்வமப்பா.

ஒடுக்கப் படுபவரை — உலகில்
உயர்த்திய தேவனப்பா
நடுக்கடல் புயலினிலே — நாவால்
நாசத்தைக் காத்தவரப்பா.

காட்டிக் கொடுத்தவரை — உம்
கண்களில் நீர் சொரிய
வாட்டமே தில்லாது — எல்லாம்
மன்னித்த மன்னனப்பா.

மரித்தும் உயிர்த்தவரே — மகா
மன்னனுமானவரே
தரித் திருந்து செபிப்போம் — இந்தத்
தாரணி காப்பவரே.

ஆக்கம்: அல்வாயூர் மாலி

# மண்ணிலும் முளைக்கும் நட்சத்திரம்

செல்வி சாரதா சண்முகநாதன்,
கரம்பொன் கிழக்கு.

**கொழும்பு கிறிஸ்தவப் பண்பாட்டுப் பேரவை அனைத்திலங்கை ரீதியில் நடாத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாவது இடத்தைப் பெற்ற செல்வி சாரதா சண்முகநாதன் "மண்ணிலே முளைக்கும் நட்சத்திரம்" எனும் சிறுகதையில் ஒரு பகுதியை இங்கு தருகின்றோம். பரிசு பெற்றவர்கள், சான்றிதழ் பெற்றவர்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்.**

— ஆர்.

இருட் போர்வை முற்றாக விலகி வெளிச்சம் லேசாக வெண்மையைப் பூசத் தொடங்கி இருந்த வேளை... வீடுகள் தோறும் விழித்துக் கொண்ட கலகலப்பு — அன்னம்மாக்கை கைவிளக்கு மாறை எடுத்துக் கொண்டு அரைஞ்சரைஞ்சு கூட்ட வெளிக்கிட்டிற்று விசிறி விசிறியாய் ஈர்க்கு கோலம் போட அதன் மேல் தன் பாதச் சுவடுகளை அடிபெயர்த்து முற்றத்தில் ஒரு தூசு தும்பு இல்லாமல் அவள் கூட்டும் நேர்த்தியைப் பார்த்தால் கைதேர்ந்த ஓவியன் ஒருவனின் எழிற் கோலம் போலவே இருக்கும். விடிந்து எழும்பியவுடன் கண்ணைத் துடைத்துக் கொண்டு செய்யும் அன்றாட கடமைகளுள் முதன்மையானது இது.

அன்றும் அப்படித்தான் தாவாரத்தோடு சாத்தியிருந்த விளக்குமாறைக் கையிலெடுத்ததும் "அம்மா ஞேய் அதோட கிடந்து நிலத்தில் அரையாம இந்தா கிடக்கு நிண்டு கூட்டுற விளக்கு

> **சிறுகதைப் போட்டி முடிவுகள்**
>
> கிறிஸ்தவப் பண்பாட்டுப் பேரவை அனைத்திலங்கை ரீதியில் நடாத்திய சிறுகதைப்போட்டி முடிவுகள் பின்வருமாறு :
>
> முதற் பரிசு :
> "ஊற்றிலே சுரக்காத நீர்"
> திரு. எஸ். முத்து குணரத்தினம்,
> மட்டக்களப்பு.
>
> இரண்டாம் பரிசு :
> "மண்ணிலும் முளைக்கும் நட்சத்திரம்"
> செல்வி சாரதா சண்முகநாதன்
> காவலூர்.
>
> மூன்றாம் பரிசு :
> "கருகக் கூடாத நாற்றுக்கள்"
> திரு. காவலூர்,
> எஸ். ஜெகநாதன்,
> பேராதெனியா.

மாறு... இதையெடுத்துக் கூட்டணே'' என்ற மகளின் அன்றாட பல்லவியை மெல்லத் தட்டிவிட்டு......

> திறமைச் சான்றிதழ் பெற்ற கதைகள்:
>
> (1) ''கறுப்புச் சிலுவை''
> மரியான்,
> கொழும்பு—15.
>
> (2) ''விதையின் நிழல்''
> திரு. காவலூர்,
> எஸ். ஜெகநாதன்
>
> (3) ''ஒரு பிரசங்கி — பிரசங்கம் கேட்கப் போகின்றார்''
> வி. கே. ரவிப்பிரியா,
> கல்லாறு.
>
> (4) ''மாற்றங்கள்''
> செல்வி பிரேமினா ஆசைப்பிள்ளை
> காவலூர்.
>
> (5) ''இவர்களும் தெய்வங்கள்தான்''
> திரு. ஆர். சின்னு
> (ஸ்ரீ தேவகாந்தன்)
> வெலிமடை
>
> (6) ''கடவுளே எனக்கு நிம்மதியை மட்டும்தா''
> முஹம்மதலி
> எம். ஏ. வாஹிது,
> கொழும்பு—12.

ம்...... அதால கூட்டுறதும் ஒரு கூட்டல்தான்... மூலை முடுக்கெல்லாம் பூந்து கூட்டுறதற்கு இதைப் போல வருமா... என தனக்குள் முணுமுணுத்துக் கொண்டு அரைவாசி முற்றம் கூட்டிக் கொண்டு வந்திருப்பாள்... அவளுக்கு நேரே மேலே உள்ள வேப்ப மரக் கிளையொன்றில் அமர்ந்திருந்த காகம் அடித்தொண்டையில் கத்திக் கொண்டிருப்பதைக் கண்டதும் இந்த விடிவெத்த காகத்திற்கு வேறவேலையில்லை... நான் கூட்டக் கூட்ட அதுவும் பழத்தைத் பிசுக்கொட்டிக் கொண்டு... விளக்குமாற்றால்சூ...சூ கலைக்க முற்படுகையில் என்ன நினைத்தாளோ தெரியாது. ''காக்காச்சி, காக்காச்சி காயிதம் இருந்தால் பறந்து காட்டேன்'' என்று சொல்லியபடியே அண்ணாந்து பார்த்தாள் குழந்தை உள்ளத்துடன்.

அவளின் மன ஓட்டத்தைப் புரிந்துகொண்டது போல காகமும் அடுத்த கிளைக்குத் தாவியதைக் கண்டதும் நெஞ்சில் ஒரு நிறைவு கொண்டவளாய், அப்படியென்றால் இன்டைக்குத் தம்பியின்ர காகிதம் கட்டாயம் வரும் போல... அந்த நினைவே ஒரு சுகமாக இனிக்க கூட்டி முடிக்கிருள்.

காகத்தின் கரிச்சல் சாஸ்திரம் சரிதான் என்பதை மெய்ப்பிக்கும் முகமாக காகிதக் காரனின் விசில் சத்தம் கேட்டதும் படலையடிக்கு நடந்தவள் இவன் கிட்டிணபிள்ளைக்கு இந்த ஒழுங்கைக்குள்ளால வாறதற்கு சரியான பஞ்சி—அந்த முடக்கிலே நின்று கொண்டு ஊதிஞல் ஓடிப்போய் வாங்கி வர இங்க என்ன குழந்தை குஞ்சுகளா இருக்கு? மனதுக்குள் லேசாகத் திட்டிக் கொண்டு எட்டி நடைபோட்டவள் ''அன்னம்மாக்கை தம்பியட்டை இருந்து வந்தது போல இருக்கு'' என்று

சொன்னது தான் தாமதம், " ஓம் ராசா! வேற யார் அனுப்ப இருக்கினம்" இயல்பாசப் புரண்டு வந்த ஆனந்த லயிப்போடு அதை வேண்டிக் கொண்டு, படி ஏறிய வள்—

" பிள்ளை ஆனந்தி இங்க ஒருக்கா ஓடிவா. தம்பி கடுதாசி போட்டிருக்கு. என்ன எழுதியிரக்கிறுன் என்று பெலத்தா வாசித்துக் காட்டு" மெதுவாகப் பிரித்தபடி வீட்டுத்திண்ணைக் கம்பத்தில் சாய்கிறுள். " தம்பியின்ர கடிதமா அம்மா? போன கிழமை தானே வந்தது? எங்கட பதில் போய் கிடைக்கிறதற்கிடை யில..." சந்தோஷமும் திகிலும் போட்டி போடத் தாயிடம் இரந்து வாங்கி பரபரவென மேலோட்டமாக ஓடவிட்டவளைப் பார்த்து நின்றவள்— அந்த மௌன இடைவெளியின் கனத்தைத் தாங்க முடியாதவளாக "என்ன பிள்ளை எழுதியிருக்கிறுன் வாசியேன?" இதயம் தாளமிடுகிறது வேதனையில்!

பின்னே இருக்காதா? அவர்கள் இருவரின் ஊன்றுகோல் அவன் தானே!

ஒன்றுமில்லையம்மா! சந்தோஷச் செய்திதான். தம்பி வேலை பார்க்கிற அந்த " அமெரிக்கன் சிப் (Ship) இலங்கைக்கு இந்த மாதக் கடைசியில வருகுதாம். அதில் வருகின்றுனும் என்று எழுதியிருக்கிறுன். கூறும் போதே கண்களில் நீர் பனிப்பு. குரல் வளையை ஏதோ ஒன்று இசக்கிப் பிடிப்பது போன்ற ஒரு திணறல்...

தேவங்கணவைப் பிள்ளையாரே என்ர பிள்ளை ஒரு விக்கினமும் இல்லாம வந்து சேரவேணும். அவன் வந்த பிறகு அவன்ர கையாலே அந்த முப்பானைப் பொங்கலையும் பொங்கிவிட வேணும் என மகனை நேரே கண்டுவிட்டதுபோல் லயித்துப் போனவள்.

" வேற என்ன ஆனந்தி எழுதியிருக்கிறுன்? படியேன்......"

அது வந்து தாயின் முகத்தில் பார்வையை நங்கூரமாக்கும் போது வெறுமை படர்ந்த அந்த முகத்தில் லேசாக ஒரு மத்தாப்பூ சிதறல் ஒளி கிழித்து நாணத்தை அப்பிவிட, " இந்தாணை நீயே இந்த வெளிச்சத்திலே நல்லா

---

## அவசியம் வேண்டியது

மிகவும் பின்தங்கிய கிராமம் ஒன்றிற்கு அரசாங்க உயர் அதிகாரி ஒருவர் சென்ருர். மக்களின் குறைகளை நேரிலே கண்ட அவர்: உங்களுக்கு இப்பொழுது மிகவும் அவசியமானது ஒரு பிரசவ விடுதி. நான் சென்றதும் அதைக் கட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பேன்" என்ருர். " ஐயா சொல்லுறதுதான் சரி; வெகு கெதியில் ஆம்பிளைகளுக்கு ஒன்டும் பொம்பிளைகளுக்கு ஒண்டுமாகக் கட்டித் தாங்கோ" என்று கூட்டத்தில் இருந்து ஒரு குரல் ஒலித்தது.

யைச் படிச்சுப் பார் என்று சொல்லிவிட்டு உள்ளத்தின் உவமையை நேரே காட்டிவிட விரும்பாமல் குசினிக்குள் புகுந்து விடுகிறுள். ஆனந்தியின் முகத்தில் ததும்பியிருந்த சந்தோஷக் களையைக் கண்ட மாத்திரத்தில் நிலாக் கீற்றுக ஒரு நிம்மதி அவள் நெஞ்சத்தில் எட்டிப் பார்க்க இவளுக்கு என்ன வந்தது இன்றைக்கு என நினைத்தவளாய்க் கண்களை இடுக்கிறபடி கடிதத்தில் பார்வையை ஓடவிடுகின்றுள்.

> பெண்கள் அழகிகளாக இருக்கலாம். ஆள் மயக்கிகளாக இருக்கக் கூடாது.
>
> — அறிஞர் அண்ணு

உள்ளே கோப்பை சட்டியுடன் கரண்டிகள் உறவாடும் சப்தம். உலைச் சத்தம் குமிழி தமிழியாய்ப் பொங்கி நுரையை மேலே தட்டும்போது ஆனந்தியின் எண்ணங்களும் சூரிய வெப்பத்தைக் கண்டவுடன் குளத்தின் அடியில் படர்ந்திருந்த பாசிகள் பாளமாய் மேலெளுந்து வருவது போன்று தம்பி ராஜனைச் சுற்றியே படர்ந்தன.

ராஜன் வரப்போகின்றுன். ஆஹா! எத்துணை ஆனந்தமான செய்தி! "அக்கா உனக்காகத் தான் இந்த வெளிநாட்டுப் பயணம். இந்த வயதிலே எல்லாத் துன்பத்தையும் அனுபவிச்சிற்று, நீ வாழாமல் வாழுறதைப் பார்க்கிறபோது என் இதயம் எப்படித் துடிக்கிறதென்று எனக்குத்தான் தெரியும். என்னுல உனக்கு ஒரு வாழ்க்கையை அமைச்சுத்தர முடிந்ததுண்ணு அதுக்காக நான் ரொம்பவும் சந்தோஷமாக இப்பயணத்தை மேற்கொள்கிறேன். இரண்டு வருஷம் கண்ணை மூடித் திறக்கிறதற்கிடையில ஓடிவிடும் அக்கா எனச் சொல்லிச் சென்ற தம்பியை நினைத்துப் பார்க்கிருள்.

ஆனந்திக்குப் பதின்மூன்று வருஷத்திற்குப் பிறகு பிறந்தவன் நடராஜன். அன்னம்மாக்கை இனி எனக்கு எங்கே பிள்ளை பிறக்கப் போகுது — கொள்ளி வைக்க கூட ஒரு பிள்ளை இல்லையே என ஏங்கி அந்த எண்ணமே மறைந்து போகும் தறுவாயில் நடராஜன் உண்டாகிறுன். வடிவேலருக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. அன்னம்! இரவல் கொள்ளியில போக இறைவன் விடமாட்டானடி என்று சொன்னது போல், இருந்தாப் போல வேலைக்குப் போய் விட்டு வீடு திரும்பியவர் எனக்கென்னவோ செய்யுதடி என தலையைச் சாய்த்தவர் போயே விட்டார். ஆறுமாதக் குழந்தையாக பாய்த்தொட்டிலில் குப்புறக் கிடந்து தலையைத் தூக்கி அப்பனை இனங் காணுவதற்கிடையில் பிஞ்சுக் கையிலே கொள்ளிக் கட்டையைக் கொடுத்து நீ பிறந்த தன் பலனைச் செய்யடா" என அனுப்பி வைத்தனர். அன்றிலிருந்து அந்த இரண்டு குழந்தைகளை வளர்க்கத் தன்னை ஓடாகத் தேய்த்துக் கொண்டவள் அன்னம்;

நீண்ட காலத்திற்குப் பின் தனக்கொரு உடன் பிறப்பு பிறந்ததில் ஆனந்திக்கு உண்டான மகிழ்வோ கணக்கிலடங்கா. தாய் வேலைக்குப் போனபின் அவனை மார்மேலும் தோள்மேலும் போட்டு ஒரு தாய்க்குரிய பாசத்துடன் வளர்த்தவள் ஆனந்தி. அவனும் தாயிலும் பார்க்கத் தமக்கையிடமே ஒட்டுதல் கூட. எதற்கெடுத்தாலும் அக்கா இடுப்பிலே அவனைத் தூக்கிவைத்துச் சோற்றுத்தட்டோடு அந்த வளவை அறுபதுதரம் சுத்திக் கதைகள் பல சொல்லி உணவூட்டும் அழகு! அந்தத் தம்பியே அவளுக்கு மேலாக வளர்ந்து நின்று இந்த சமுதாயத்தின் சீதனச் சீர்கேட்டால் வாழ முடியாத அவள் நிலைகண்டு தனக்குள்ளே அழுது வடித்திருக்கிறான் என்றால்!

தம்பி சின்னப் பையன் அவனுக்கு எங்கே நம் அவலம் புரியப் போகுது என்று தன்னுணர்வுகளை — எதிர்பார்ப்புக்களை மெல்ல மூடி வைத்தாலும் உள்ளுக்குள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் தன்மையை வெகு நுணுக்கமாய் அவன் அவதானித்துக் கொண்டுதானிருந்தான்.

பதினெட்டு வயதில் இருந்தே ஆனந்திக்குக் கல்யாணம் பேசி ஜாதகக்கட்டுடன் பலர் படியேறி வந்தனர் என்றாலும் "எவ்வளவு கொடுப்பீர்கள்?" என்ற கேள்விக்குப் பூஜ்யம் பதிலாக வந்ததால் ஒரு பெண்ணின் அழகு — குணம் — பண்பாடு எல்லாம் அதனுள் அமிழ்த்தப்பட்டுவிட்டது. வெறுமையாகக் காட்சி கொடுக்கும் அவளை இந்தச் சமுதாயம் ஏறெடுத்துப் பார்க்காதபோது அக்காவுக்கு வாழ்வே அமையாதா? ஐயோ என்ன கொடுமை! ஒவ்வொரு முறை பேசி வரும்போதும் அந்த ஏக்கத்திற்கும் — தவிப்புக்கும் — வேதனைக்கும் ஒரு விடிவே ஏற்படாதா என பாடப்புத்தகத்துள் கவனத்தைச் செலுத்தாமல் தாயின் விரல்களை லேசாக நீட்டியும் மடக்கியும் நெட்டியும் முறித்தவாறே "போம்மா! அக்காவின் அழகுக்கு இதைவிட்டால் வேறொன்று இதற்குப் போய்ப் பெரிசா வேதனைப்படுகிறீர்களே?" என்பான்.

எதிர்நோக்கும் பிரச்சனையை அவனிடம் சொல்லிச் சமாளிப்பதற்கு அனுபவம் போதாது என எண்ணியவள் "நீ போய் படி ராஜன்" எனத் தன்னிடம் விட்டு நழுவிச் செல்லும் அம்மாவை நினைத்தால் ஆனந்திக்குப் பரிதாபமாக இருக்கும். அதே வேளை தனக்குப் பின்னால் பிறந்தவனிடம் பயமும் தயக்கமும் காட்ட வேண்டி உள்ளதே யென நமைச்சல். ஏனெனில் ராஜன் புத்திசாலி, "எனக்காக நடந்துச்சு. இந்தத் தையிலே முகூர்த்தம் வைக்கலாம்னு, அன்று சொல்லிப் போனார்களே முடிவு என்ன? நீயாவது சொல்லேன்" அந்த வினாடியில் தன்னுடைய ஏமாற்றத்தையும், மனக்கசப்பையும் மெல்ல விழுங்கிக் கொண்டு "ஒன்றுமில்லையடா, அவங்க அதிகபணம் சீதனமாக — டொனேசனாக — நகையாக இப்படி எத்தனையோ பட்டியலை இழுக்கிறார்கள். இருக்கிறவங்க

கொடுக்கிறார்கள் என்பதற்காக இல்லாதவரைத் துன்புறுத்தலாமா? அம்மாவைப் பார்க்கிறப்போ நான் ஏன் பிறந்தேன். அப்பாவைப் போல நானும் செத்திருக்கலாமே என இப்பத்தான் தோணுது''என அவனது பதினைந்தாவது வயதிலே அவள் கீறிவிட்ட அந்தக் கீறல் .. .. காலப்போக்கில் விஸ்வரூப மெடுத்து ''அம்மா! இந்த முறை ஜீ. சீ. ஈ. ரெஸ்ட் எடுத்தப் பிறகு எவ்வளவு கஷ்டப்பட்டு என்னைப் படிக்க வைக்கிறதென்றாலும் நான் படிக்கமாட்டேன்.''

'என்ன தம்பி அப்படிச் சொல்லிட்டாய்? அம்மா உன்னை ஒரு பட்டதாரி ஆக்கணும் என்று எவ்வளவு ஆசைப்படுகிறா? எனக்கும் அந்த ஆர்வமும், ஆசையும் தான் இருக்கு. ஆனால் எம் குடும்ப சக்தியையும் நான் கருதவேண்டுமல்லவா அக்கா? இனியும் என்னைப்பற்றி அம்மா கவலைப்படுகிறதில் அர்த்தமேயில்லை. ஏன்னு அவங்க உழைப்பிலே இந்த அளவு படித்திட்டேன். அதுவே, போதும். இனி உன்னைப்பற்றி நானும் யோசிக்க இடங்கொடேன் அக்கா?' என்று அவன் வாய்விட்டுச் சொல்லாவிட்டாலும் அவன் செய்கை அப்படித்தான் இருந்தது.

அதுதான் வெளிநாட்டுப் பயணம். (அடுத்த இதழில் முடியும்)

## துறவியின் அனுபவம்

மெட்ருஸ் மௌண்ட் ரோட்டிலே இலங்கையைச் சேர்ந்த இளந்துறவியொருவர் சாதாரண உடையில் போய்க் கொண்டிருந்தார். அவர் முன்னே ஒருவன் தோன்றினன். "ஐயா என் பெண்டாட்டிக்குப் பிரசவ வேதனைங்க. ஹாஸ்பிட்டலுக்குக் கொண்டு போகக் கையில் ஒரு பைசாவும் இல்லேங்க. கையில ஏதாச்சும் இருந்தா கொடுத்து உதவி செய்யுங்க'' என்று கெஞ்சினன். அவன் காட்டின திசையை நோக்கினர் துறவி. அவன் சொன்னது போல பிரசவவேதனையால் துடித்துக் கொண்டிருந்தாள் ஒரு பெண். துறவியாருக்கு இரக்கம் மேலிட்டது. அவனுக்கு உதவி செய்யத் தீர்மானித்தார். அப்பொழுது அவரிடம் இருந்தது அந்த ஐந்தே ரூபாய் மட்டும். அதை அப்படியே கொடுத்துவிட்டார். இன்னும் அதிகமாக உதவி செய்ய முடியவில்லையே என்ற கவலை அவருக்கு.

மூன்றுமாதம் கழித்து மீண்டும் ஒருநாள் அதே வழியால் அவர் போய்க்கொண்டிருந்தார். அதே மனிதன் வந்து அவரை வழிமறித்தான். பழைய பல்லவியையே பாடினன். அவன் காட்டிய திசையில் ஒரு பெண் பிரசவ வேதனையுடன் இருக்கத்தான் செய்தாள். துறவிக்கோ ஆச்சரியமாய் போய்விட்டது. ''எனப்பா அன்றைக்கும் இதே மாதிரித்தானே சொல்லி என்னட்ட காசு வாங்கினய். ஒரு வருஷத்தில் உன் பெண்டாட்டி எத்தனை தரமப்பா பிள்ளை பெறுகிருள்?'' என்று கேட்டார்.

"அண்ணைக்கு வந்ததும் நீங்கதானு?'' என்று கேட்டவன். —அதற்கு மேலும் அங்கு நிற்க பைத்தியமா, பிடித்தானே ஓட்டம். அன்றைக்கு அவனுக்காக இரங்கி ஏமாந்ததை நினைக்க அவர் முகத்தில் அசடுவழிந்தது!

# விடிவு

உள்ளத்தில் எண்ணியதெல்லாம்
இல்லத்தில் பெறுவது விடிவு,
மனத்தினில் கொண்டதெல்லாம்
மனையினில் அடைவது விடிவு.

பசித்திருப்போருக்கெல்லாம்
புசிக்கக் கொடுப்பது விடிவு
இருளிலே வாழ்ந்தோரெல்லாம்
ஒளியிலே வாழ்வதும் விடிவு.

துன்பத்தில் வாழ்வது விடுத்து
இன்பத்தில் வாழ்வது விடிவு,
சிற்றின்ப மாயை விடுத்து
பேரின்பம் பெறுவது விடிவு.

கூனி வாழ்வது விடுத்து
கூனாது மாழ்வது விடிவு.
மானமற்று மாள்வது விடுத்து
மானத்தோடு மரிப்பது விடிவு.

நிலையற்ற வாழ்வை விடுத்து
நிலையான பேறையடைவது விடிவு,
நோட்டு பெறுவதை விடுத்து
வீட்டை அடைவது விடிவு.

நத்தார் வந்திட்டால்
நலிவுற்றோர்க்கென்றும் விடிவு,
புத்தாண்டும் புலர்ந்திட்டால்
புவியுள்ளார்க்கென்றும் விடிவு.

— வங்காலை எல். ஐ. நாதன்.

# எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்



அன்பின் வாசக சகோதர சகோதரிகளே, உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கம்!

மார்கழிமாதம் என்று சொன்னதுமே, நத்தார் நினைவு தானாகவே வந்துவிடுகிறது. கிறிஸ்து பிறந்தது, மனிதனை அனைத்து அடக்கு முறைகளினின்றும், அடிமைத் தளைகளில் நின்றும் மீட்பதற்காக, சுதந்தரமாக மனிதன் பிறந்தாலும், அவன் சூழலினால், கல்வி முறைகளினால், மதச் சடங்குகளினால், சமுதாய பழக்க வழக்கங்களினால், அரசியல் வெறிகளினால் அடக்கப்பட்டுச் சிறைப்பட்டு விடுகின்றான். அனைத்து நாடுகளிலும் இந்தப் பரிதாபத்தை நாம் பார்க்கின்றோம், அனுபவிக்கின்றோம்.

## அமெரிக்க நாட்டில் அடிமைத்தனம் :

இந்த அமெரிக்க நாட்டில்கூட ஓரினம் இன்னோர் இனத்தினால் அடிமைகளாக்கப்பட்டது. பல ஐரோப்பிய நாடுகளில் இருந்து இங்கு குடியேறிய வெள்ளையர்கள் நிலத்தைப் பண்படுத்த, வீடுகளில் வேலை செய்ய, இன்னும் பல தொழில்களுக்காக ஆபிரிக்க மக்களை இங்கு இறக்குமதி செய்தார்கள், இந்தியத் தமிழர்கள் பலரை ஆங்கிலேயர் இலங்கைக்குக் கொண்டுவந்ததுபோல இவ்வாறு வந்த ஆபிரிக்க மக்கள் படிப்பறிவற்றவர்கள் வேலை உணவு என்ற ஒரு சிறு வட்டத்துள் வாழ்க்கையை முடித்துக் கொண்டார்கள். வெள்ளையர்கள் இம்மக்களை மிருகங்களாக, அடிமைகளாக நடத்தினார்கள். நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக இந்த நிலைமை நாட்டில் நிலவியது.

பொறுமைக்கும் எல்லையுண்டு என்பார்கள். அதுபோன்று இந்த ஆபிரிக்க மக்கள் பொறுமையிழந்து பொங்கியெழுந்தார்கள். சாது மிரண்டால் காடு கொள்ளாது. அடிமைகள் மிரண்டால் நாடு கொள்ளாது. சண்டைகள், கொலைகள் வீடுகளிலும் வீதிகளிலும் நடைபெற்றன. இயக்கங்கள் உருவாகின. உரிமைக் குரல்கள் எழுந்தன.

மார்ட்டின் லூதர் கிங் போன்ற அரும்பெருந் தலைவர்கள் இந்தக் கறுப்பர்கள் மத்தியில் தோன்றினார்கள்.

ஒரு சில வெள்ளையர்களின் கல் நெஞ்சங்கள் கசிந்தன. மூடப்பட்ட கதவுகள் சில திறந்தன; 'அவர்களும் மனிதர்கள்,' என்ற எண்ணம் வித்தூன்றி வளர்ந்தது. கறுப்பர்களின் விடுதலைக்காகச் சில வெள்ளையர்களும் குரல் எழுப்பினார்கள். இத்திருப்பம் மிக முக்கியமானது.

### கறுப்பர்களுக்கு விடுதலை வழியில்...

மூடப்பட்ட பாடசாலைகள், கோவில்கள், உணவு விடுதிகள், வேலை வாய்ப்புகள் மெல்ல மெல்ல அவர்களுக்கும் வழிவிடத் தொடங்கின. கறுப்பர்கள் பலர் இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி முன்னுக்கு வரத் தொடங்கினர்.

இன்று அவர்கள் எல்லோரும் அமெரிக்கர்கள். சுதந்திரமும், சமத்துவமும் அனைவருக்கும் உண்டு. கிறிஸ்து இங்குதான் பிறப்பார்.

ஆயினும், நூற்றாண்டுகளாக ஊறிவிட்ட சில எண்ணங்கள், பதிந்துவிட்ட சில கறைகள் வெள்ளையர்கள் சிலரின் அடிமனதில் இன்றும் உள்ளன; அவ்வப்பொழுது 'இவை' பொங்கியெழுந்து வெடிப்பதுவும் உண்டு.

### ஒற்றுமைக்கு வழி:

அண்மையில் அமெரிக்காவின் கிழக்குப் பகுதி நகரமொன்றில்


## எதிர்பாருங்கள்!

மலரும் ஆண்டுடன் இதழ்மேல் இதழ் அடுக்கி மலரும் இதயத்து மலர்கள் அத்தனையும் அனுபவ மலர்கள்.

* * *

## அமெரிக்க அனுபவங்கள்

கண்டதைக் கண்டபடி — அதன் வழி
எண்ணியதை எண்ணியபடி
எழுதுகிறேன்.

— கரவையூர்ச் செல்வம்

(பொஸ்ரன்) இப்பிரச்சினை தலை தூக்கியது. மாணவர்களிடையே இப்பிரச்சினை தோன்றி, அந்நகரத்தையே பயமுறுத்தியது; ஆனால், அழகாக அனைவரும் சேர்ந்து பிரச்சினையைத் தீர்க்க முயன்றார்கள். இதைச் சொல்லத்தான் இவ்வளவு முன்னுரை தேவைப்பட்டது. வரலாற்றின் அடிப்படையில் இப் பிரச்சினையைப் பார்க்காவிட்டால், பிரச்சினையின் ஆழம், வேகம், வெறி தாக்கம் எதுவுமே சரிவரப் புரியாது;

இங்குள்ள இந்தப் பிரச்சினை ஈழத்து சாதிப்பிரச்சினையுடனும், இனப்பிரச்சினையுடனும் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய ஒன்று.

பொஸ்ரனில் உருவெடுத்த இந்த வெறியை எப்படி அடக்கினார்கள்?

> " மனச்சான்று — தெய்வீகநெருப்பில் ஒருபொறி. எப்போதும் அது உன் இதயத்தில் எரிந்து வரும்படி பார்த்துக்கொள்."
>
> — ஜார்ஜ் வாஷிங்டன்
>
> * * *
>
> "கடவுள் இல்லாத மனச்சான்று — நீதியில்லாத நீதிமன்றம்."
>
> லா. மார்ட்டீன்

பொஸ்ரன் நகரத்து மதப் பெரியோர்கள் வெவ்வேறு மதங்களைச் சார்ந்த வெள்ளையரும், கறுப்பரும் ஒன்றுசேர்ந்து பகிரங்க வழிபாடு நடத்தினார்கள். இரு பக்கத்தையும் சார்ந்த பொதுமக்கள் மனிதஉரிமைகளை மதிப்பதாகக் கையொப்பமிட்டார்கள். விளையாட்டு வீரர் (இரு சார்பிலும்) பாடசாலைகள், கல்லூரிகள் சென்று (ஒன்றாக) பிரச்சினையைப் புரியவைத்து ஒற்றுமையை நிலைநாட்டினார்கள். சிறுபான்மையினருக்கு விசேட விதமான பாதுகாப்பு அளிக்கப்பட்டது;

இந்நாட்களில் ஒன்றுகூடிய அமெரிக்கநாட்டு ஆயர்பேரவை பொதுமக்களுக்கு அறிக்கை விட்டது.

" கத்தோலிக்க மக்களாகிய நாம் எங்கள் கடந்தகாலக் குற்றங்களை, முன்னோர்செய்த தவறுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். கிறீஸ்துவின் நற்செய்தியை எடுத்துரைக்கும் நாம், இனவேறுபாட்டை வளர்க்க முடியாது; கிறீஸ்துவத்தின் அடிப்படைக் கொள்கைக்கு முரணானது இனவெறி. கத்தோலிக்க மக்களிடமிருந்து இனவேறுபாடு, சிறுபான்மை வேறுபாடுகள் அடியோடு அழிக்கப்பட வேண்டும்.".

கத்தோலிக்க நிறுவனங்களுக்கு, அமைப்புகளுக்கு, பாடசாலைகளுக்கு. கல்லூரிகளுக்கு. பங்குகளுக்கு — கத்தோலிக்க மக்கள் அனைவருக்கும் அமெரிக்க ஆயர் பேரவை கொடுத்த அருமையான நத்தார்ப்பரிசு இது,

நத்தார்ப் பரிசு :

ஈழம்வாழ் கத்தோலிக்க மக்களுக்கு மட்டுமல்ல, அனைத்து மக்களுக்கும் கொடுக்கப்பட வேண்டிய நத்தார்ப் பரிசு — இதுவாகவே இருக்கவேண்டும்;

இன வெறிகள், சாதி வெறிகள், மதவெறிகள், மொழிவேறிகள், நிறவெறிகள், அதிகார வெறிகள், பண வெறிகள் ஒரு சிலரால் தூண்டிவிடப்படுவன; அப்பாவி மக்கள் சிந்தனையின்றி, உண்மையறியாது இவ் வெறிகளால் ஆட்கொள்ளப் படுகிறார்கள்; இறுதியில் பாதிக்கப்படுபவர்களும், இந்த அப்பாவி மக்களே.

ஈரானில் நடப்பதைப் பாருங்கள். தனிப்பட்ட அரசியல் பழிவாங்கல் (நியாயமானது என்று கொண்டாலும்), மெல்ல மெல்ல வளர்ந்து இன்று "முஸ்லீம் உலகமும், அஞ்ஞான உலகமும்" என்ற சவாலுடன் வந்து பயங்கர உருவெடுத்து நிற்கின்றது அரசியல் வாதிகளின் அதிகார வெறிகளும், பணம் பெருக்கும் பேராசையும் சாதாரண மக்களை எப்படி ஆட்டிப் படைக்கின்றன! அரசியல் ரீதியில் நினைத்ததை நிறைவேற்ற முடியாமல் போகும் தருவாயில், மதத்தை ஒரு சாதனமாகப் பயன்படுத்தும் பேருண்மையை ஈரான்-அமெரிக்க பிரச்சினை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது;

ஒருவனை "அஞ்ஞானி" என்று கூற யாருக்கு உரிமை உண்டு? ஒருவனைச் "சாத்தானின் பிள்ளைகள்" என்று அழைக்க யாருக்கு உரிமை உண்டு? பகிரங்கமாகத் தீர்ப்பிடும் இச்செயல் இரண்டாம் நூற்றாண்டின் விளிம்பில் நிற்கும் இன்றைய விஞ்ஞான — தொழில்நுட்ப—நவநாகரிக உலகில் நடைபெறுவதை நம்ப முடியவில்லை! ஆனால், நடைபெறுகின்றது;

## நத்தார்ச் சிந்தனை :

இந்நிலை மாறவேண்டும். "எல்லோரும் வாழவேண்டும்" என்ற மனப்பக்குவம் வளரவேண்டும்? மனிதன் மகிழ்வாகவாழ வழிகள் வகுக்கப்பட வேண்டும்: இந்த உலகம் ஓரினத்துக்காகவோ, ஓர் நிறத்துக்காகவோ, ஓர் மொழிக்காகவோ, ஓர் மதத்திற்காகவோ அல்ல;

"தூய மனச்சான்றுடையவன் எளிதில் திருப்தியும் சாந்தியுமடைவான்."

— அக்கம்பிஸ்

* * *

"குற்றமற்ற மனச்சான்றே குறைவற்ற செல்வம்."

— வெப்ஸ்டர்

* * *

"மனச்சான்றை மதியாதிருந்தால் அது பழிவாங்காதிராது."

— ஸவுத்

முரணாக, இவ்வுலகம் அன்பிற்காக உண்மைக்காக உண்டு; மன்னிப்பும் நீதியும்தான் அதற்கு வழி. சுதந்திரமும் சமத்துவமும் சகோதரத்துவமும்தான் அதற்கு உறுதுணை. மதங்கள் எல்லாம் இதையே சொல்லுகின்றன.

இதையே வலியுறுத்திச் சொன்னது மட்டுமல்ல, அதற்காகவே உயிரையும் தியாகஞ் செய்யப் பிறந்தவர், கிறீஸ்து.

அன்னார் பிறந்தநாளைக் கொண்டாடுவதுதான் நத்தார் தினம். இவ்வேளை வெறுங் கொண்டாட்டங்களைவிட, கிறீஸ்துதந்த இச் செய்தியை, நற்செய்தியை நாம் பெறவேண்டியது முக்கியம்.

இச்சிந்தனையை எமது புதிய உலக வாசக அன்பர்களோடும் இலக்கிய நண்பர்களோடும் பகிர்ந்துகொண்டு, அனைவருக்கும் 'அன்பு பிறந்த—உண்மை உருவெடுத்த' திருநாள் வாழ்த்துக்கள் சொல்லி, மலரும் ஆண்டு புதிய நம்பிக்கைகளைக் கொண்டுவர இறையருளை இறைஞ்சி, இச்சிந்தனையில் உங்கள் அனைவரையும் சிந்திக்கவிட்டு மறு மலரில் சிந்தனையுடன் சந்திக்குமட்டும்—

அன்பு வணக்கம் கூறி விடைபெறுவது !

உங்கள் அன்பின் சகோதரன்,

[signature]

# கருத்து மோதல்—அடுத்த போட்டி

தனியார் கல்விநிலையங்(ரியூட்டரி)களால்

— நன்மைகள் அதிகம் — தீமைகளே அதிகம்

இவற்றிற்குச் சாதகமாகவும், பாதகமாகவும் தோன்றும் உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்புங்கள்.

விதிகள் :

* தயவுசெய்து தெளிவாகவும், ஒழுங்காகவும் எழுதி அனுப்புங்கள்.
* ஒருவரே சாதகமாகவும், பாதகமாகவும் வாதங்களை ஒருங்கிணைந்து எழுதக்கூடாது.
* தைத்திங்கள் இருபதாம் (20-1-1980) நாளுக்கு முன்னர் உங்கள் வாதத்தை அனுப்புங்கள்.
* சிறந்த வாதங்களுக்கு இருசார்பிலும் பரிசுகள் உண்டு.
* தகுந்த ஆதாரங்களுடன் சுருக்கமாக ஆனால், தெளிவாக இருபக்கங்களுக்கு மேற்படாமல் முழுத்தாளில் (13" × 4") உங்கள் வாதத்தை (கூடுமானால் ஒரு பக்கத்தில் மட்டும்) வரைந்து அனுப்புங்கள்.
* ஆக்கங்கள் அனைத்தும் கருத்துமோதல், புதியஉலகம், த.பெ, எண் 2, யாழ்ப்பாணம் முகவரிக்கே அனுப்பவேண்டும்.

# சிறுவர் உலகு

## சிறுவர் ஆண்டும் நாமும்

இவ்வருடத்தின் முடிவில் சிறுவர்கள் ஆண்டும் முடிவடைந்து விடும். ஆனால் சிறுவர்கள் எப்போதும் இருப்பார்கள்.

இந்தச் சிறுவர் ஆண்டிலே போட்டிகள் விழாக்கள், மலர் வெளியீடு, முத்திரை வெளியீடு, சிறுவர் நூல் வெளியீடு என்பன எல்லாம் நடந்தன. இவை அனைத்தும் சிறுவர் சமுதாயத்தின் நலன் கருதி நடந்தனவா என்பது கேள்விக்குறியே!

அன்புச் சிறார்களே இச்சிறுவர் ஆண்டின் முடிவில் தான் சிறுவர்களாகிய உங்கள் பணி ஆரம்பமாகிறது. 1979-ம் ஆண்டுடன் மட்டும் சிறுவர் ஆண்டு முடிந்து விடவில்லை. இது சிறுவராகிய உங்கள் வாழ்க்கையில் தொடரட்டும். சமுதாயத்தின் சிற்பிகளான நீங்களே நாளைய உலகை அமைக்கப் போகின்றீர்கள்.

நான் எனது வீட்டுக்கு, சமுதாயத்திற்கு நாட்டுக்குச் செய்ய வேண்டிய பணிகள் அதிகம் இருக்கின்றன. சிறுவரால் என்ன ஆகும் என்று நீங்கள் கேட்கக் கூடும். கடுகு சிறிது காரம் பெரிதல்லவா!

உங்களில் பலரால் பாட முடியும்; ஆட முடியும், நடிக்க, எழுத, வாசிக்க, சித்திரம் தீட்ட, இப்படி இன்னும் எத்தனையோ திறமைகள் உங்களிடம் இருக்கின்றன. இவை அனைத்தும் இறைவனால் கொடுக்கப்பட்டவை. இவற்றை இறைவனின் மகிமைக்கும் மனித சமுதாயத்தின் நலனுக்கும் பயன்படுத்திச் சமூகப்பணியில் சிறந்து விளங்குவீர்களாக.

— இ. பெர்ணுட்,

---

**உங்களுக்குத் தெரியுமா?**

1. ஆசியாவிலே முதன் முதலாகக் காரோட்டப் போட்டி எங்கே எப்பொழுது நடைபெற்றது?

2. 1978-ல் யப்பானில் நடைபெற்ற சர்வதேச அழகுராணிப் போட்டியில் சர்வதேச அழகுராணியாகத் தெரிவு செய்யப்பட்டவர் யார்?

3. உலகிலே மிக ஆழமான கிணறு எங்குள்ளது?

4. உலகில் அதிபெரிய நூதனசாலை எங்குள்ளது?

5. திடீர்த் தேயிலைக் குளிகையைக் கண்டுபிடித்தவர் யார்?

(விடை மறுபக்கம்)

---

# உன் பாதை நீ கண்டு செல்ல வேண்டும்

உங்களது நண்பர்கள் அல்லது நெருங்கியவர்கள் ஏதும் விஷயத்தில் வெற்றி பெறும்போது அதையிட்டு நீங்கள் மகிழ்ச்சி கொள்ளுகிறீர்களா? உங்களிலும் பார்க்க ஒருபடி கூடுதலாய் அவர்கள் முன்னேறும் போதும் இந்த மகிழ்ச்சி நீடிக்கிறதா? அல்லது பொறாமைதலை தூக்குகிறதா? பொறாமை அல்லது காழ்ப்பு என்பது ஓர் அவலட்சண உணர்வாகும். அத்துடன் அது ஒரு தேவையற்ற உணர்வாகும்! ஆக்கத்தை விரும்புவோர் பொறாமையுணர்வைக் களைவது கடமை.

பொறாமையினால் மன நிம்மதியை இழப்பதை விடுத்து ஒருவர் தம் இலட்சிய வழியில் முன்னேறுவதே விவேகம். எல்லோருக்கும் ஆர்வம் எழுவதுண்டு. ஆனால், இது மெல்லிய அரைகுறை உணர்வாக மட்டும் தோன்றுவதேயல்லாது உண்மையான, திண்மையான முயற்சியாய் மாற வேண்டும். இவ்வித முயற்சியே வெற்றிதர வல்லது. இறைவனை வணங்கி மனதார வேண்டும் போது இவ்வித ஆற்றலானது கூடிய வலிமை பெறுவது மனித சமுதாயத்தின் அனுபவமாகும். இவ்விதம் முன்னேறுவது நல்லதல்லவா?

— நாக பத்மநாதன்

**விடைகள் :**

1. இலங்கையில் 1904இல்
2. விவியன்டேல் கார்மான்
3. அமெரிக்காவிலுள்ள மென்டேனுவில்
4. மியூனிக் நூதனசாலை
5. பிறதர் டன்ஸ்டன் செல்வராஜ்





கணவன்: "இப்ப பெடியள் பள்ளிக்கூடத்துப் பெட்டையளைக் கண்டால் ஒதுங்குறுங்க. ஏனென்டு தெரியவில்லை?

மனைவி: சங்கதி தெரியாதோ, "ஓரம்போ" பாடிய பெடியள் இப்ப பொலீஸ் கரைச்சலிலே ஓரமாயே ஒதுங்கிட்டாங்க.

சிறுகதை

# இருள் அகன்றது



**ம**னித குலத்தை மீட்கவென மனிதனாகவே மண்ணுலகில் இயேசு பாலன் பிறந்த பொன்னாளான அன்று அவ்வூர்ப் பெருஞ் செல்வந்தர்களான ஜோசப், தீற்ரூ தம்பதிகள், தம் நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் விருந்துபசாரம் செய்து தமது அன்பையும், ஆனந்தத்தையும் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பெற்றோரின், பெரியோரின் குதூகலத்தில் பங்கு கொள்ளாமல் தனபாட்டிற்கு விளையாடிக் கொண்டிருந்த அஞ்சலத்திற்குத் திடீரென அந்தோனி அப்புவின் நினைவு வருகிறது. ஜோசப், தீற்ரூ தம்பதிகளின் பாந்த தோட்டத்தைக் கடந்த ஆறு வருடங்களாகக் காவல் காத்து வரும் அந்தோனிக்கு ஐம்பது வயதிருக்கும். ஐந்து பிள்ளைகளின் தந்தையான அவர் வறுமையின் கோரப்பிடியில் சிக்கித் தவிப்பவரானாலும் நேர்மையில் நின்று சிறிதும் பிசகாதவர். இனிமையாக, இதமாகப் பேசுபவர். அவரை அன்சலத்திற்கு மிகவும் பிடிக்கும். "அப்பு" என்று அன்போடு அழைத்துக் கொண்டு அடிக்கடி அவர் குடிசைக்குப் போய், "எனக்குக் கதை சொல்லுங்கள்" என்று கொஞ்சுவான். அந்தோனியும் ன்த சின்னையாவான அஞ்சலத்தைத் தனது குழந்தையைப் போல் மடியில் வைத்து அரவணைத்தபடி அந்தக் காலத்துக் கதைகளை அழகாகச் சுவைபடக் கூறுவார். இந்தச் செய்கைகள் அன்சலத்தின் பெற்றோர்க்கு அறவே பிடிக்காது.

ஒருநாள் வழமைபோல் அந்தோனியின் வீட்டுக்குப் போய் வந்த அன்சலத்துக்கு நல்ல அடி போட்டதோடு "இனிமேல் அந்தோனிக்கிழவனின் குடிசைக்கு நீ போகக் கூடாது" என்று கட்டளை இட்டு விட்டார்கள் அவன் பெற்றோர். அதன் பின் அன்சலம் அந்தோனி அப்புவின் குடிசைக்குப் போகவே இல்லை. இன்று அந்தோனி அப்பு ஆட்களுக்குக் கூட நத்தார்தான். ஆனால், பாவம். வேளா வேளைக்குச் சாப்பிடவே வழி தெரியாமல் தவிக்கும் அவர்கள் எப்படி நத்தார்ப் பண்டிகையைக் கொண்டாடுவார்கள்? அவர்களை எண்ணி வேதனையடைந்

தான் அன்சலம். அவர்களைப் பார்த்து விட்டு வர அந்தப் பிஞ்சு உள்ளம் துடித்தது. ஆனால், மறுகணம் பெற்றோரின் கண்டிப்பான கட்டளை அவனைப் பயம் காட்டியது. "அன்டையப் போல் அடி விழுமோ" என அஞ்சினான் அந்தப் பாலகன். இறுதியில் பெற்றோர்மேல் அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது.

"எங்களைப் போல காசு உள்ள ஒங்களோட என்றால் நல்லாச் சிரிச்சுச் சிரிச்சுப் பேசுவாங்க பழகுவாங்க அந்தோனி அப்புவைப்போல ஆக்களென்றால் எள்ளி நகையாடுவது, என்னைப்போல அவங்களை வாட்டி வதைக்கிறதும், குறித்த வேலைக்குக் கூலியக் குறைச்சுக் குடுக்கிறதும், கொடுமைகள் செய்யிறதும். அவங்களோடே சேர்ந்து பேசிப் பழகிற என்னைக் கண்டிப்பதும் அப்பப்பா! ஈவு இரக்கமே கிடையாது. என் அப்பா அம்மாவுக்கு ஏன் தான் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறார்களோ" அப்பா அம்மாவின் இளி செயல்களை எண்ணியும் அவன் வேதனையடைந்தான்.

"இண்டைக்கு எப்படியாச்சும் அந்தோனி அப்புவின்ர வீட்டுக்குப் போகத்தான் வேணும்... விருந்தினர்கள் வந்திருக்கிறதால ஒருவரும் என்னைக் கவனிக்கவும் மாட்டினம் தேடவும் மாட்டினம்"

எண்ணியபடியே வீட்டிற்குள் சென்று யாரும் காணாமல் ஒரு தட்டில் இனிப்புப் பண்டங்களை எடுத்துக் கொண்டு அந்தோனியின் குடிசையை நோக்கி ஓடினான் அன்சலம். அவனை அந்தோனி அப்பு ஆனந்தத்தோடு வரவேற்றார்.

"சின்னய்யாவுக்கு என்ர கைகள் புளித்துப் போட்டுது போல அதுதான் இந்தப் பக்கமே காணல்ல" என்றும் கேட்டு வைத்தார். "அப்பிடியெல்லாம் ஒன்றுமில்லை அப்பு. இந்தாருங்கோ இதை உங்களுக்குக் குடுக்கச் சொல்லி அப்பா அம்மா தந்தார்கள்..." என்று கூறித் தான் கொண்டு வந்த பலகாரத் தட்டை அப்புவின கையில கொடுத்தான் அன்சலம். அப்புவும் மகிழ்ச்சியோடு வாங்கிக் கொண்டார். சிறிது நேரம் அங்கேயே இருந்து விட்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தான் சிறுவன அன்சலம்.

---

செல்வி
ஹெலன் றோசறி வர்க்கீஸ்

---

மாலை நேரம். பெரிய ஐயா சொன்ன பல வேலைகளைச் செய்து கொடுத்து விட்டுத தன் குடிசைக்குக் கிளம்ப ஆயத்தமானார் அந்தோனி. "இந்தாப்பா அந்தோனி கொஞ்சம் நில்லு. அம்மா தரும் பலகாரங்களை எடுத்துக் கொண்டு போ" என்றார் ஜோசப். "காலையிலதான் சின்னய்யாவிடம் குடுத்துவிட்டிருந்தீங்களே ஐயா. அது போதும்" என்றார் மிக மரி

யாதையோடு. அவ்வளவுதான் ஜோசப்பின் முகம் கறுத்தது: "நான் குடுத்து விட்டேனு... என் மகனிடமா..." முணுமுணுத்தபடி மகனை அழைத்த அதே நேரம் அந்தோனியை வீட்டுக்குப் போகும்படி கட்டளை இட்டார். "சின்னய்யா காலையில் ஒருவருக்கும் தெரியாமல் தான் சாப்பாட்டுச் சாமான் கொண்டு வந்து தந்திருக்கிறுர் போல... இது தெரிந்திருந்தால் அவரை நான் காட்டிக் கொடுத்திருக்க மாட்டேனே கடவுளே.. என்னுல அந்தப் பாலகன் அடி வாங்கப் போறுரே யேசுவே" என்று ஏங்கியபடி தன் குடிசைக்குச் சென்றுர் அந்தோனி.

தன் எதிரே பேந்தப் பேந்த முழித்தபடி நின்றிருக்கும் மகனையே வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தார் ஜோசப்: அந்தப் பார்வையில் பாசம் இருந்தது, தெளிவு தெரிந்தது: ஆம், தமது ஆடம்பர, அகங்காரப் புத்தியால் அந்தோனி அப்புவின் வீட்டுக்குப் போகக் கூடாது, பேசக் கூடாது என மகனுக்குத் தடை போட்ட போதும், இன்று பெற்றேரே கொடுத்ததாக அவர்களுக்குத் தின்பண்டங்கள் கொடுத்து விட்டு வந்து நிற்கும் தன் குழந்தையின் கள்ளம், கபடம், வஞ்சகம் இல்லாத தூய உள்ளத்தை உணர்ந்து கொண்டபோது, தாம் ஊாக பணம் உள்ளவர்களோடு பண்டிகையைக் கோலாகலமாகக் கொண்டாட, மகனே வாழ வழியின்றி வாடும் வறியவர்களுக்குக் கொடுத்து மகிழ்ந்ததை அறிந்த போது, தான் இதுவரை காலமும் விட்ட தவறுகள் தெளிவாகியது அவருக்கு. குழந்தை வடிவில் கடவுளே வந்து தன் குருட்டுத்தனமான எண்ணங்களைப் போக்கி, இதயத்தைச் சூழ்ந்திருந்த இருளை நீக்கி ஒளியைப் பரவவிட்டது போன்றதோர் உணர்வேற்பட்டது அவருக்கு. "மகனே" என அன்சலத்தை அன்போடு அணைத்து முத்தமிட்டார் ஜோசப். அடிவிழப் போகிறதென எதிர்பார்த்த அன்சலத்துக்கு அப்பாவின் திருப்பம் பேரானந்தத்தைக் கொடுக்க அவனும் அப்பாவை அன்போடு அணைத்துக் கொள்கின்றுன்.

---

❀ தன்னைப்பற்றிப் புகழாமலும் மற்றேரை இகழாமலும் இருக்க வேண்டும் என்று ஒரு சட்டம் இருந்தால் உலகில் மௌனம் நிலவும்.

❀ நான் இருக்கிறபோது மரணம் இல்லை. மரணம் இருக்கிறபோது நான் இல்லை. ஆகவே நான் இருக்கிறபோது இருக்க முடியாத மரணத்துக்காக நான் ஏன் அஞ்சவேண்டும்?

❀ கடவுள் பெண்களை அழகாகப் படைக்கிருர். ஆனல், நாகரீகம் அவர்களை அலங்கோலப்படுத்துகின்றது.

தொகுத்தவர்:
ஏபிரகாம் முத்து,
பாஷையூர்.

---

# மார்கழி நோன்பு

— பேராசிரியர் அ. மு. பரம சிவானந்தன் எம். ஏ., எம். லிட். —

மாதங்களில் சிறந்து விளங்குவது மார்கழி மாதமாகும். மக்கள் மனத்திலுள்ள மாசுகளையும் புற அழுக்குகளையும் போக்கும் திங்கள் இதுவாகும். அறியாதவர் இம்மாதத்தைப் 'பீடை மாதம்' என்பர். பீடை என்பவற்றையெல்லாம் அகத்தும் புறத்தும் இல்லாமல் அகற்றும் மாதமாகிய இதைப் பீடை மாதம் எனல் எவ்வாறு பொருந்தும்? பீடை 'போக்கும் மாதம்' எனக் கொள்ளல் சாலச்சிறந்தது. கண்ணன் 'நான் திங்களில் மார்கழியாக இருக்கிறேன்' என்று கூறியதாகப் பகவத் கீதை சாற்றுகின்றது.

இம்மார்கழி அனைவருக்கும் சிறந்த ஒரு திங்கள் எவ்வித வேறுபாடுமின்றி மக்கள் இம்மாதத்தே விழா ஆற்றுகின்றார்கள். சிறப்பாக நில நடுக்கோட்டுக்கு வடக்கே இருக்கும் மக்களுக்கு இத்திங்கள் மகிழ்வளிக்கும் திங்கள். தெற்கு நோக்கிச் செல்வதாகக் கணக்கிடப்படும் சூரியன் இம்மாதத் தொடக்கத்திலே தான் (டிசம்பர் 21) வடக்கு நோக்கித் திரும்புகின்றான். வாடையும் குளிரும் போக்கும் வகையில் அவன் ஒளிக்கதிர் வடக்கு நோக்கி வருகின்றது. தமிழர்கள் தைத்திங்கள் முதல் தேதியை 'சங்கராந்தி' என்ற பெயரால் சூரியன் திரும்பும் நாளாகக் கொண்டாடுகின்றனர். எனினும் உண்மையில் கதிரவன் ஒளிதிரும்பும் நாள் மார்கழியிலேயே அமைகின்றது.

தமிழ்நாட்டில் மக்கள் இத்திங்களை விழாத் திங்களாகவே கொண்டாடுவார்கள். இத்திங்களின் முதல் நாள் தொடங்கி முடிவுநாள் வரை மக்கள் விடியலில் எழுந்து விழா ஆற்றுவர். ஆடவரும் பெண்டிரும் தூய நீரில் மூழ்குவர்! தத்தம் வழிபடு கடவுளரை வணங்குவர்! வீடு மெழுகி விளக்கேற்றி வைப்பர்; தெருக்களைத் துப்பரவு செய்து நீர் தெளித்துக் கோலமிட்டு, பூசணிப் பூவிட்டு மகிழ்வர்; தத்தம் சமயப் பாடல்களையும் பாடுவர். தமிழ்நாட்டுக் கோயில்களிலெல்லாம் எத்திங்களிலும் விடியலில் ஒலியாத பூசை மணி

> ❀ பிரெஞ்சுமொழியில் ஒரு வார்த்தைக்கு ஒரே அர்த்தம்; ஆங்கில மொழியில் இரண்டு அர்த்தம்; தமிழில் நாலைந்து அர்த்தங்கள்; ஆனால் மௌனத்தில் எல்லையற்ற அர்த்தங்கள் உண்டு.

யொலி, இத்திங்களில் விடியற் காலையில் ஒலிக்கும்; அகமாசும் புறமாசும் ஒருங்கே அகலும் ஒரு திங்கள் இது இத்திங்களில் வீடுகளைத் துப்புரவு செய்து, வெள்ளையடித்து நிறந்திட்டுவர் இறுதி நாளில் எல்லாக் கழிவுகளையும் அப்புறப்படுத்தி, அனைத்தையும் நெருப்பிட்டுப்பொசுக்கி நீராடி மகிழ்வர். ஆம்! அகமும் புறமும் ஒரு சேர உயர்வு பெற்றுச் சிறக்கும் திங்கள் மார்கழி தானே!

### பாவை நோன்பு

இம்மார்கழியில் மங்கையர் நோன்பினை மேற்கொள்வர் அதற்குப் 'பாவை நோன்பு' என்பது பெயர். மார்கழி நோன்பென்றும் அதைக் கூறுவர் மணமான பெண்கள் இத்திங்களை மங்களத் திங்களாகக் கொண்டு நீராடி மகிழ்ந்து, நல்லறங்களைப் புரிவர் மணமாகாத கன்னிப் பெண்களோ, இத்திங்களில் தாம் தாம் வழிபடு கடவுளரை தமக்கு நல்ல கணவரை நல்குமாறு வேண்டுவர்; இந்நோன்பு தமிழ் நாட்டில் மிக்க பழங்காலத் தொட்டு நடைபெற்று வந்த ஒன்றாகும். சைவரும் வைணவரும் இவ்விழாவைக் கொண்டாடி வந்தனர் என்பது உறுதி; மணிவாசகர் பாடிய 'திருவெம்பாவை' யும், ஆண்டாள் பாடிய 'திருப்பாவை' யும் இவ்விழாவை வலியுறுத்துவன அல்லவோ! அப்பாடல்களில் மணமாகாத கன்னிப் பெண்கள் விடியலில் எழுந்து ஒருவரை ஒருவர் அழைத்துக்கொண்டு நீர் நிலைகளை அடைந்து நீராடி இறைவனை நோக்கி வேண்டும் நிலை எண்ணத்தக்கதாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 9

குறுக்கெழுத்துப் போட்டி இல. 9இல் யாரும் சரியான விடையை அனுப்பி வைக்கவில்லை, என்பதை மனவருத்தத்துடன் தெரிவிக்கின்றோம். சரியான விடைகள் இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளன;

| | | | | |
|---|---|---|---|---|
| 1 அ | 2 க | 3 வை | ■ | 4 கூ |
| 5 நு | 6 ங் | 7 கு | ■ | 8 வ |
| 9 ம | 10 கா | 11 சு | 12 க | 13 ம் |
| 14 தி | 15 ரு | 16 ட | 17 ன் | ■ |
| ■ | ■ | 18 ர் | 19 மு | 20 சு |
| 21 பூ | 22 ஞை | ■ | 23 கை | 24 வை |

குறுக்கெழுத்துப் போட்டி இல. 10. தை — மாசி 1980 இதழில் இடம் பெறும்;

விடிந்தும் உறங்கும் மற்றப் பெண்கள்விழிக்கச் செய்வதும், அவர்கள் கூறும் மொழிகளும், இருவருக்கும் இடையில் நடக்கும் சொற்போரும் வேடிக்கையானவை

'மானே நீ நென்னலை
நாளைவந்து உங்களை
நானே எழுப்புவன்
என்றலும் நாணுமே
போனதிசை பகராய்!
(திருவெம்பாவை)

என்று முன்னாள் தானே முன் வந்து எழுப்புவதாகச் சொன்ன பெண் இருக்குமிடம் தெரியாது உறங்கும் நிலையைப் பிறபெண்கள் எள்ளி நகையாடுகின்றனர். விடிந்த நிலையினை,

கீழ்வானம் வெள்ளென்று
எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தன காண்'
(திருப்பாவை)

என்றும்,

'உங்கள் புழக்கடைத்
தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து
ஆம்பல்வாய் கூம்பின காண்
(திருப்பாவை)

என்றும் ஆண்டாள் காட்டி உறங்கியவரை எழுப்பும்போது யார்தான் உறங்கமுடியும்? அப்படி அளவு மீறித் தூங்கியவரையும் ஆண்டாள்,

'கும்பகருணனும் தான்
தோற்றும் உனக்கே
பெருந்துயில் தான் தந்தானோ?'

என்று நையாண்டி செய்யும் போது அவர்களும் எழுந்திருக்கத் தானே செய்வார்கள்!

மூழ்கி, அணிந்து, உண்டு ஆடுவதோடு, அவர்தம் விழா முடிந்துவிடவில்லை. கன்னியர் தாம் விரும்பும் கணவரைப்பற்றி ஆண்டவன் முன்கூறும் சொற்களும் அறிந்து மகிழத்தக்கன.



ஒருத்தி: "நான், என்ர புருஷனை டிவோஸ் (Divorce) பண்ணப் போறன்.

மற்றவள்: ஏன், ஏதேனும் சண்டையே"

ஒருத்தி: இல்லையடி, இப்ப அவர் என்னைவிட ரிவியை தான் (T. V,) நல்லாகக் கவனிக்கிறார்.

றேகன் அன்ரனி
பண்டாரவளை

ஆண்டாள் ஆண்டவனையன்றி மற்றவரை மணக்க விரும்பாதவர்; 'மானிடர்க்கு என்று பேச்சுப்படில் வாழ்கிலேன்' என்று பாடியவர். எனவே, அவர் தாம் வழிபடும் திருமா

லுக்கு உரியவராகவே வாழ விரும்புகின்றார்;

## நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை

இந்த அளவோடு அவர்கள் நோன்பு முடித்து விட்டால் நாம் கவலைப்பட வேண்டியதில்லை; அவரவர் வழிபடு கடவுளர் அவர்தம் குறைகேட்டு ஒத்த நற்கணவரைக் கூட்டி வைப்பர், அதில் நாம் காணும் சிறப்பு என்ன? ஆனால், அக்கன்னியர் தம் கருத்தை அந்த அளவோடு கட்டுப்படுத்தவில்லை; பரந்த உலகம் அவர் முன்வருகிறது. "நாம் மட்டும் விரும்பிய கணவரைப் பெற்றுப் பயன் என்ன? வையகமும் துயர் தீர்ந்து வாழ வேண்டாவா?" என்ற நல்லுணர்வு அவர்களுக்குத் தோன்றுகிறது. தமிழ் நாட்டின் விழாக்களின் அடிப்படையே 'நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை' என்பதிலே தானே அமைகின்றது? எனவே, தாம் வேண்டும் கணவரைக் கேட்டும் இம்மார்கழி நோன்பு கொண்டாடும் மகளிரும் பரந்த உலகை நோக்குகிறார்கள். ஆம்! இவ்வுலகம் வாழ நன்மழையைப் பெய்வித்து விளைவினைப் பெருக்க அவர்தம் வழிபடு கடவுளை வேண்டிப் பணிகின்றனர்; தானியங்கள் விளைந்து, பசுக்கள் பால் சுரந்து, வையகம் துயர் நீங்கி வளம் கொழிக்க ஆண்டாளும் மணிமொழியாரும் ஆண்டவனை நோக்கி வேண்டும் பாடல்கள் மக்கள் உள்ளங்களில் என்றும் தங்க வேண்டுவனவாகும்,

'ஓங்கி உலகளந்த
உத்தமன் பேர்பாடி
நாங்கள் தம் பாவைக்குச்
சாற்றிநீர் ஆடினால்
தீங்கின்றி நாடெல்லாம்
திங்களும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெல்
ஊடு கயல் உகளப்
பூங்குவளைப் போதில்
பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து
சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும்
வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்து
ஏல் ஓர் எம் பாவாய்!

என்று ஆண்டாள் மாதமும் மும்மாரி பெய்து செந்நெல் விளைந்து சிறக்கவும், பசுக்கள்

---

எங்கு சுதந்திரமிருக்கிறதோ அதுதான் என்னுடைய நாடு.
—பிராங்ளின்

நாம் உபயோகமில்லாத ஆடைகளை களைந்துவிடுவது போல், தவறான தலைமையைத் தீர்க்கவும் சுதந்திரம் உண்டு.
—அண்ணல் காந்தி

பேச்சு சுதந்திரமே உண்மையான சுதந்திரம்.
— ரூஸோ

சுதந்திரமே நமது பிறப்புரிமையாகும்.
— திலகர்.

அடிமைப்பட்ட அரசனாக இருப்பதைவிட, சுதந்திர முள்ள ஆண்டியாக இருப்பதே மேல்.
—யாரோ.

---

மடிநிறைந்த பால் சுரந்து ஊட்டவும், வையகம் வாழவேண்டிய உண்மையை உணர்ந்து கண்ணால் வேண்டும் காட்சியை உள்ளம் மறந்தும் அமையுமோ!

அருள் உள்ளம் வாய்ந்த மணிமொழியார் மழையின் பண்பினை அன்னையின் பண்பாகவே பாராட்டுகிறார். இயற்கையாகிய மேகமும், அதன் விளையாட்லும், பொழிவும் உமையின் உருவத்தை அவர் உள்ளத்தே கொண்டுவருகின்றன. அப்பொழுவே அன்னையின் அருள் என்று முடிக்கிறார் அவர்.

இவ்வாறு தாம் மட்டும் வாழ்வதன்றி—தம் விருப்பத்தை மட்டும் நிறைவேற்றிக் கொள்ளுவதன்றி - வையகத்தையே வாழ்விக்க நோற்கும் இம்மார்கழி நோன்பு நம் நாட்டுப் பழம் பெரும் விழாக்களுள் ஒன்று என்பதை எண்ணும்போது நாம் மகிழத்தான் வேண்டும். ஆனால், அம்மகிழ்ச்சி என்றும் நிலைக்க நம்முன்னோர் வழிசெய்யவில்லை. மார்கழி மாதம் பொதுவாகச் சிறந்த முறையில் போற்றப்படுவது இன்றைக்கும் காணும் ஒரு நிகழ்ச்சிதான் எனினும், கன்னியர் நீர்மூழ்கி வழிபாடியற்றும் வழக்கம் நாட்டில் இல்லை. 'மறைந்தது ஏனோ!' என்று எண்ணும் அதே வேளையில் தமிழ்நாட்டின் மேற்கே நோக்கும்போது அகம் மகிழ்கின்றது: தமிழர் மறந்துவிட்ட பல நல்ல பண்டிகைகளையும், விழாக்களையும் அன்று தமிழராயிருந்து இன்று மலையாள நாட்டவராய் மக்கள் மறவாது போற்றுவதைக் கண்டு மகிழ்ச்சிப் பெருக்கம் உண்டாகின்றது: ஆம்! இந்த மார்கழி நோன்பு இன்றும் மலையாள மக்களால் நன்கு போற்றப்படுகின்றது.

## மலையாள மக்களின் முப்பெரும் விழாக்கள்

மலையாளிகளுக்கு ஆண்டில் மூன்று முக்கிய விழாக்கள் உள்ளன. 'ஓணவிழா' ஒன்று, புத்தாண்டுப் பிறப்பாகிய 'விசு' ஒன்று, ஆதிரையாகிய இம்மார்கழி நோன்பு ஒன்று. பொதுவாக மார்கழி முழுவதிலும் சிறப்பாக அத்திங்களின் நிறைமதி நாளாகிய திருவாதிரை, அதற்கு முன் சில நாட்கள் ஆகியவற்



ஒருவர்: "என்ர மனுஷியின்ர மூளையென்றால்!
மற்றவர்: "ஏன் என்ன சங்கதி?
ஒருவர்: இப்பவே, கரியெல்லாம் சேர்க்குது ஏனெண்டு கேட்டால் கரியிலே கார் ஓடுகிற காலம் வருமாம்."

றிலும், பெண்கள் நீராடி, நாம் மேற்கண்டவாறு விழாக் கொண்டாடுவதை மலைநாடு செல்வார் இன்றும் காணலாம். மணமான பெண்களுக்கு 'மங்கள விழா' வாகவும், கன்னியருக்கு மணவினை கூட்டும் விழாவாகவும், அங்கு இது அமைகின்றது. விடியலில் எழுந்து கூடி, குளத்துக்குச் சென்று, ஒருவகைப் பாட்டிசைத்து பறை கொட்டி, அவர்கள் ஆடுவார்கள். அவர்கள் மூழ்கியபின் இளநீர், வாழைப்பழம், அரிசிச் சோறு போன்ற உணவினைக் கொள்வர்; நன்கு வெற்றிலையைச் சுவைப்பர்; கூந்தலைப் பாதிரிப் பூவால் அலங்கரித்துக் கொள்வர். இவ்விழா இறைவனால் எரிக்கப்பட்ட 'காமன்' மீண்டும் எழுந்தது பற்றிக் கொண்டாடுவதாக ஒரு சாரார் கூறுவர். ஆகவே, தமிழர் மறந்த ஒரு நோன்பு இன்றும் மலையாளத்தில் போற்றப்படுவதறிந்து நாம் மகிழத்தானே வேண்டும்!

மாநிலத்தார் வாழ்கவென்றே அமைந்த இம் மார்கழி நோன்பு தமிழ் நாட்டுப் பழம் பெரும் விழாவாகத் திங்கள் முழுவதும் கொண்டாடப்பட்டது. அத்தினங்களில் வரும் நிறைமதி நாளாகிய 'திருவாதிரை' அந்நாட்களுள் சிறந்த நாள். அந்தநாளைத்தான் 'அத்தன் ஆரூரன் ஆதிரை நாளால் அதுவண்ணம்' என்று சுந்தரர் பாடிச்சென்றார். சம்மந்தர், 'ஆதிரை நாள் காணாதே போதியோ' என்று பூம்பாவையை விளித்தார். தில்லையில் இறைவன் அந்நாளிலேதான் களிநடம் புரிகின்றான். அந்நாளை ஒட்டிய ஏகாதசியிலேதான் அரங்கநாதனும் பவனிவருகின்றான். கிறிஸ்து பிறந்த டிசம்பர் 25-ம் நாளும் அந்த நாளை ஒட்டித்தான் அமைகின்றது. இவ்வாறு வேறுபாடற்ற விழாவாக அமைந்த இம் மார்கழி நோன்புவிழா தன் பெருமை குறையாது நிலைத்து நிற்க வழிகாண வேண்டுவது தமிழர் கடமை! ஆம்! இந் நோன்பு விழாவின் இறுதியிலேதான், தூய்மையைப் போற்றும் விழாவாக அமையும் 'போகியும்' அதை அடுத்து உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும் பொங்கல் விழாவும் வருகின்றன.

- நகைச்சுவை என்பது பயனுள்ளதாக மாறுவது சொல்பவனைப் பொறுத்ததன்று, கேட்பவனைப் பொறுத்தது

—சேக்ஸ்பியர்

- ஆயிரம் பேர் உன்னை அழைக்கலாம்; ஆயிரம் பேர் உன்னை வெறுக்கலாம்; ஆனால், அழைப்பவர்கள் நண்பர்கள் அல்ல; வெறுப்பவர்கள் விரோதியுமல்ல.

- பிறரைக் குற்றங் கூற நீங்கள் ஒரு விரலைச் சுட்டிக் காட்டும்போது மற்றைய மூன்று விரல்களும் உங்களை நோக்கி இருப்பதை அறிந்து கொள்ளுங்கள்.

# புதுமைப் பதில்

எஸ் பிரேமலதா
சாவகச்சேரி

தனிநாடு தமிழனுக்குக் கிடைத்தால், இனவேற்றுமை, மதவேற்றுமை இன்றி வாழ என்ன செய்ய வேண்டும்?

**இனம், மதம் என்று பூசல்களைக் கிளப்பி அதன் மூலம் வயிறு வளர்க்க நிற்கும் ஓநாய்கள் ஒழிக்கப்பட வேண்டும்.**

* * *

செல்வி விக்னேஸ்வரி விஸ்வலிங்கம்
வேலணை கிழக்கு,
வேலணை—5

கோவிற் திருவிழா என்று பத்து அல்லது பதினைந்து நாட்கள் மூக்கால உணவையும் மாமிச உணவையும் வெறுத்து விரதம் அனுட்டித்துப் பின் விரதம் முடிந்த அடுத்த நாளே ஆடு, கோழி என முண்டியடித்து வயிறு புடைக்க உண்பவர்களைப்பற்றிய தங்கள் கருத்தென்ன?

**மதத்தையும் அதன் சடங்குகளையும் கடமைக்காகச் செய்யாளும் மனப்பான்மையே இது. மரண வீட்டில் பிணம் போனகையோடு ஆடடித்துச் சாப்பிடுவதுபோல் இருக்கிறதல்லவா?**

* * *

செல்வன் அ. உ. விக்ரர்
நாரந்தனை மேற்கு

இன்றைய தமிழ்த்தலைவர்கள் தமிழர்களை 'சிந்தெழு தமிழா தனிநாடு காண்போம்" என்று கூறுகிறார்களே இவர்களின் எதிர் காலம் எப்படி அமையும் ?

**இது சிலைமூட்டும் தலைவர்கள் நடந்துகொள்ளும் விதத்தில் அமைந்துள்ளது. வளர்த்த கடா மார்பிலே பாயவும் செய்யலாம்;**

* * *

எஸ். புஸ்பராணி அந்திரேஸ் முதலியார்
பரந்தன்

கிறிஸ்து அரசர் தோன்றிய காலத்திலும் இடைக்காலத்திலும் தற்போதும் ஏன் சமாதானம் தோன்றவில்லை?

**கிறிஸ்து கொடுத்த கொடையாம் சமாதானத்தை மனிதன் இன்னும் ஏற்றுக் கொள்ளாததால் வந்ததில்லை. பாவம் இருக்கும்வரை சமாதானம் இல்லை. நிலையற்ற உலகத்தில் நிலையான இன்பத்தை நாம் தேட விழைவதே முக்கிய காரணம்.**

* * *

செல்வி பற்றிமா ஞானப்பிரகாசம்
நாவற்குழி

நண்பர்களாக வேஷம் போட்டு மற்றவர்களுடைய வாழ்க்கையைக் கெடுத்துவிட்டு அதனைப் பார்த்து சுவைப்பவர்களுடைய போக்கைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் ?

வீட்டைக் கொளுத்திக் குளிர்காய்ந்து சிரிப்பவர்கள் சமூகத்தில் இருந்து புறக்கணிக்கப்பட வேண்டிய பேர்வழிகள்.

* * *

ஹேகன் அன்ரனி
பண்டாரவளை

வாழ்வில் ஒளியின்றி உரிமையின்றி இருளில் வாழும் மக்களுக்கு நீர் கூறுவதென்ன ?

ஒளியாய் விளங்கும் இறைவனைத் தேடுவதில்தான் ஒருவன் முழுமையான விடுதலையை அடைய முடியும். அந்த ஒளியை ஏற்று விசுவசிப்பவனை இருள் மேற்கொள்ளாது அடிமைத்தனம் ஆட்கொள்ளாது.

சுயநலம் இரத்தத்தில் ஊறியதா அல்லது இரத்தம் சுயநலத்தில் ஊறியதா ?

இரத்தம் சுயநலத்தில் ஊறியதாக இருந்தால் உலகத்தில் எல்லோருமே சுயநலவாதிகளாகத்தான் இருப்பார்கள்; காலம், இடம், சூழ்நிலை, பரம்பரைகளைப் பொறுத்து சுயநலம் இரத்தத்தில் ஊறிவிடுகிறது.

* * *

செல்வி H. R. வர்கீஸ்
இரத்தினபுரி

பணமக்களைகளை விடுவிக்குமாறு பரிசுத்த பாப்பரசர் கேட்டபோதும் அதை இஸ்லாமிய மதத்தலைவர் மறுத்ததை நினைக்கையில் நெஞ்சு வலிக்குதே......

இது இஸ்லாமியருக்கும் இஸ்லாமியர் அல்லாதவருக்குமிடையே எழுந்துள்ள பிரச்சினை என்று கூறும் அயொத்துல்லா கொமெய்னியின் கருத்து அதைவிட வேதனையை கொடுக்குதே!

* * *

முல்லைமலர்
முல்லைத்தீவு

எனது நண்பியின் பெற்றோர், அவள் திரைப்படம் பார்ப்பதையோ, நாவல்கள் சஞ்சிகைகள் படிப்பதையோ, வானொலி கேட்பதையோ, பேனாநண்பர் தொடர்பையோ வெறுக்கின்றனர். அவளது பெற்றோருக்கும் அப்பெற்றோரைப் போன்று அறியாமையில் உழலும் பல பெற்றோருக்கும் தாங்கள் கொடுக்கும் புதுமையானபதில்தான் என்ன?

பெற்றோர் பிள்ளைகளை மதிக்க வேண்டும் என்று சிறுவர் ஆண்டு கொண்டாடும் இந்த சகாப்தத்தில் இத்தகைய பெற்றோர்பற்றி கூறுவதென்றால், இவர்கள் தாம் பெற்ற பிள்ளைகளிலேயே நம்பிக்கையற்றவர்கள். எம் பிள்ளைகள் கெட்டுப்போகக்கூடியவிதத்திலேயே இருக்கிறார்கள் என்று மற்றவர்களுக்கு இதன் மூலம் விளம்பரம் செய்கின்றார்கள். வீட்டிலே கட்டி வளர்க்கப்படும் நாய் கடிநாயாக வளர்வதும், அதை அவிழ்த்துவிடும் சந்தர்ப்பம் வரும்போது ஊருக்குள்ளே பொல்லாத நாயாகவும் உள்வீட்டாரையே கடிக்கும் நாயாக மாறுவதையும் அவர்கள் அறியார்கள் போலும். ஆனால் பிள்ளைகள் படிக்கும்

பார்க்கும் கேட்கும் விடயங்களின் தரத்தை அறிந்து கட்டுப்படுத்தும் உரிமை பெற்றவர்களுக்கு உண்டு.

நான் ஒரு இலட்சியத்தை அடைய என்ன செய்ய வேண்டும்?

என்ன செய்யவேண்டும் என்ற கேள்வியிலேயே நிற்காமல் இதைத்தான் செய்யப்போகின்றேன் என்ற முடிவோடு முதலடியை எடுத்துவைத்து இலட்சியப் பயணத்தை துணிவோடு தொடங்குங்கள். ஆனால் கொள்கையில் தூய்மை, நெஞ்சில் நேர்மை வாழ்வில் தியாகம் என்பன முக்கியம்.

*  *  *

ஹெலன் ரோசாறி வர்கீஸ்
இரத்தினபுரி

தாம் செய்யும் காரியம் பாவமான காரியம் என்று தெரிந்தும் அதைச் செய்வோர் பற்றி தாங்கள் கூறும் கருத்து ?

அறிந்தும் விஷத்தை அருந்துபவர்கள்! தெரிந்தும் நெருப்பில் விழுபவர்கள்?

*  *  *

விக்ரர்குமார்,
ஊர்காவற்றுறை.

அடுத்த வருடத்தில் இருந்து 'புதிய உலகம்' மாதம் ஒரு மலராக வெளிவருமா?

மாதம் ஒன்று வெளிவர வேண்டும் என்பதே எமது ஆசையும். அதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டுதான் வருகின்றோம். ஆனால், அடுத்த ஆண்டில் நிறைவேறும் என்பது சந்தேகமே.

## சமயோசிதம்

எனது ஊர்ப் பாடசாலை ஒன்றுக்கு ஒரு புதிய ஆசிரியர் வந்து சேர்ந்தார்.

வந்தவர் வந்து சில நாட்கள் கழிந்தன அதுவரையும் எல்லா ஆசிரியர்களும் "இளாஸ்" களிலேயே பாடசாலை இடைவேளைப் பொழுதுகளில் தேனீர் அருந்தி வந்தனர்.

வந்த புதிய ஆசிரியர் தாழ்த்தப்பட்ட வர்க்கத்தச் சேர்ந்தவர் என்பதை மற்றைய ஆசிரியர்கள் எப்படியோ அறிந்துகொண்டனர்.

வந்தவரும் எம்முடன் சமமாக இருந்து தேநீரை கிளாசில் அருந்துவதா? என்று சில ஆசிரியர்கள் பொருமிக் கொண்டனர்.

அதன் பலனாக அடுத்தநாள்

புதிய வெள்ளிக் குவளைகளை அவர்கள் வாங்கினார்கள் எல்லோரும் குவளைகள் வாயில் முட்டாமல்......அண்ணாந்து தேநீரைக் குடிக்க ஆரம்பித்தனர்.

நன்றி—செந்தழல்
(யாழ்வளாக தமிழ் மன்ற வெளியீடு)

தந்தவர் – வ. கயித்தாம்பிள்ளை

# உங்கள் பார்வை

அறவழிப் போராட்டக்குழு,
சாவகச்சேரி.

"தீண்டாமை ஒழிப்பு" சிறப்பு மலர் வெளியிட்டமைக்காக எமது குழு தங்களைப் பாராட்டுவதுடன் நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமை அடைகிறது. புதிய உலகம் ஒவ்வொரு பகுதியும் விரும்பத்தக்கதே தங்கள் முயற்சி சிறப்புற எம்மாலான சகல ஒத்துழைப்புக்களையும் தர ஆயத்தமாகவுள்ளோம்.

பரிபூரணன்,
ஹாலி-எல,

'தீண்டாமை ஒழிப்பு' மலர் சாதிவெறி பிடித்த மனிதக் கும்பல்களுக்கிடையே ஒருசலசலப்பை ஏற்படுத்தும் உணிகர முயற்சி, வாழ்க. கரவையூர்ச் செல்வம் அவர்கள் "எண்ணியதை எண்ணியபடி" எழுதி எங்கோ தொலைவில் இருந்து எம்முடன் இதயசுத்தமுடன் உறவாடும் அவர்களுக்கு எனது நத்தார்-புதுவருட வாழ்த்துக்களைப் புதிய உலகம் மூலமாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆர். எஸ் செல்வரட்ணம்,
அல்வாய்,

புதிய உலகம், புரட்டாசி-ஐப்பசி இதழ் கிடைக்கப்பெற்று படித்து மகிழ்ந்தேன். "தீண்டாமை ஒழிப்பு" சிறப்பு மலராக வெளிவந்த இவ்விதழ், யாவரும் படிக்கவேண்டிய ஒன்றாகும். துணிகரமான அரிய கருத்துகள் பல பொதிந்துள்ள விடயங்கள் சிந்தைக்கு விருந்து படைக்கின்றன, ஆங்காங்கே இணைக்கப்பட்டிருக்கும் சிறு துணுக்குகள் மனதைக் கவர்வதாயுள்ளன,

சாதிகளும் சாதிப் பெயர்களும் எவ்வாறு உருவாகின என்பதுபற்றி கூறப்பட்ட விளக்கங்கள் பிரமாதம்!

சஞ்சிகையில் காணப்படும் விடயங்களை இளைஞர்-மகளிர்-சிறுவர் போன்ற பல திறத்தினருக்குமென வகுத்து அமைத்தால் நன்கு அமையும் என எண்ணுகிறேன்.

செல்வி லூட்ஸ்,
நெடுந்தீவு.

அழகிய இதழ் விரித்து இனிய மணம் பரப்பும் புதுமலரே! சென்றமுறை என் இதயத் தடாகத்தில் நீ ஓர் வண்ணத் தாமரையாய், 'ஜாதிபேதம் ஊரை மாய்க்கும்' எவனும் மானசீக உண்மையை உன் வண்ண இதழ்களில் எண்ணத்தூரிகைகொண்டு எழுதி வைத்தாய். எனவே, உள்ளத்தால் நெருங்கி உன்னிடம் மயங்கிய நான், உன்னை எப்படிப் பாராட்டுவது எனத் தெரியாமல் தவிக்கிறேன். நீ ஆல்போல் தழைத்து, அறுகுபோல் வேரூன்றி நீடூழி வாழ வேண்டும் என்பதே என் நிறைவான ஆசை.

சகோ. தொபியாஸ்,
மாத்தளை.

புதிய உலகம் ஒரு நல்ல புத்தகம். நமது ஆன்மாவுக்கு இன்பம் ஊட்டுகிறது, கற்பிக்கிறது. தெரியாதவிபரங்களை அறிமுகம்செய்து வைக்கிறது. நமது குணநலன்கள் எல்லாம் அபிவிருத்தி அடையும்படி செய்கிறது. அதே நல்ல புத்தகமாக விளங்கும் "புதிய உலகமே" மென்மேலும் அபிவிருத்தி அடைந்து ஒரு புதிய உலகை உருவாக்க வேண்டும் என்று மனமார வாழ்த்துகின்றேன்.

சகோ. ய. யோ. ஜெயரத்தினம்,
அம்பிட்டியா.

சென்ற புரட்டாசி-ஐப்பசி இதழில் தங்கள் 'புதுமைப் பதில்' ஒன்றில் நற்செய்தியை உதாரணம் காட்டிப் பதிலளித்திருந்தீர்கள். 'புதிய உலகம்' கிறீஸ்தவர்களுக்கு மாத்திரமன்று; மாறாக, சகலமத மக்களுக்குமுரிய ஒரு சஞ்சிகையாகையால், இப்படியான பதில்கள் கிறீஸ்தவர்களல்லாதவர்களால் புரிந்துகொள்வது கடினமாயிருக்குமென நம்புகிறேன், எனவே தங்கள்பதில் சகல மதத்தவர்களும் புரிந்துகொள்ளக் கூடியதாக அமையட்டும்.

என். ஜீவகலா,
சாவகச்சேரி.

தங்கள் புரட்டாசி-ஐப்பசிஇதழ் கண்டேன், மகிழ்ந்தேன். ஆனால், "கருத்து மோதல்" அடுத்த மாசத்திற்கு இடம்பெறவில்லை என்பதை நினைத்து வருந்துகின்றேன்

— யஸ்மீன்,
வங்காலை.

புதிய உலகம் புரட்டாசி-ஐப்பசி மலரில் கருத்து மோதல்களைத் தவிர்ப்பது பற்றிக் குறிப்பிட்டிருந்தீர்கள். இதைப்பற்றி எனது நோக்கு தப்பான அபிப்பிராயங்களுக்காகக் கருத்து மோதலைத் தவிர்ப்பதைவிட, தப்பான அபிப்பிராயங்களை நீக்கி புதிய உலகை பழைய உலகில் காலடி வைக்காது செய்தல் நலமென நினைக்கிறேன். தயவுசெய்து இதைப்பற்றி தங்களது அபிப்பிராயம் என்ன என்பதைப் பிரசுரிக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

* * *

தாங்கள் கருதியதுபோல நாம் கருத்துமோதல் பகுதியைக் கைவிட்டு விடவில்லை. கருத்து மோதல் தொடரும். ஒருவரது சமய, சாதி, இனம்பற்றி இன்னொருவர் சாடும் மோதல்களையே தவிர்க்க வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தோம்.

—ஆர்

செல்வி ஹெலன் றோசறி வர்க்கீஸ்,
இரத்தினபுரி.

புதிய உலகத்தின் புரட்டாசி-ஐப்பசிக்கான "தீண்டாமை ஒழிப்பு" சிறப்புமலரை நுகர்ந்தேன் ஒவ்வொரு இதழ்களும் ஓராயிரம் அறிவுரைகள் வழங்கியிருந்ததைக் கண்டேன், மகிழ்ந்தேன்.

சமுதாயச் சீர்திருத்தத்திற்காகச் சலிக்காது உழைத்து வரும் புதிய உலகத்தின் புனிதமானபணி தொடரப் பாராட்டுகிறேன், புதிய உலகத்திற்கு என் நத்தார் வாழ்த்துக்கள்,

Elayathamby. Nadarajah Kalaiarasy

திருமதி எி. எம். மரியாம்பிள்ளை,
யாழ்ப்பாணம்.

புதிய உலகம் என்று பெயர் வைத்ததுதான் வைத்தீர்கள் — மிகப் பொருத்தமாக. மலரத் தொடங்கிய காலத்திலிருந்து ஒவ்வொரு மலரும் புத்தம்புதிய கருத்துக்களோடு, கருத்துக்களை எடுத்துத்தரும்நடையில் புதுமையோடுதான் மலர்ந்து மணம் பரப்புகின்றது.

ஒருபாற்கோடாது துணிந்து நின்று எதையும் உள்ளது உள்ளபடி எடுத்துரைத்து உணரவைக்கும் (எமது பார்வை), ஆசிரிய தலைப்புக் கட்டுரை பாராட்டுக்குரியதாகும். புரட்டாசி-ஐப்பசி இதழில் 'கரவையூர்ச் செல்வம்' அவர்கள் அமெரிக்க பல்கலைக் கழகங்கள்பற்றி எழுதியுள்ளவற்றை 'ருகிங் வியாதி' யால் சமநிலையிழந்த இளைஞர் சமுதாயம் சிறிது கண்ணோட்டமிட்டால் நல்லது போலத் தெரிகிறது.

கார்த்திகை—மார்கழி இதழில் கருத்து மோதலுக்கு இடமில்லையோ. கிறீஸ்து ஜயந்தி இதழாகையால்? 'சமாதானத்தைக்கொண்டு வந்த கிறீஸ்துவின் பிறப்புக்காலத்தில் கருத்து மோதல் ஏன்' என்றுதான் தவிர்த்து விட்டீர்களோ என்னவோ.

செல்வி பற்றிமா றேஸ் அந்தோனிப்பிள்ளை,
முல்லைத்தீவு.

புதிய உலகம் புரட்டாசி-ஐப்பசி இதழ் தீண்டாமை ஒழிப்பு மலராக மலர்ந்ததையிட்டு மகிழ்ச்சியடையும் அதேவேளையில், ஆசிரிய-நிர்வாகக் குழுவினர்க்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். எண்ணியதை எண்ணியபடி எழுதும் கரவையூர் செல்வம் அவர்களின் கட்டுரையும் அனுபவங்களும் சுவையானவை தரமானவை. அவர் தொடர்ந்தும் இப்பகுதியை எழுதவேண்டும்.

செல்வி அன்ரனெற் அந்தோனிமுத்து,
ஊர்காவற்றுறை.

தங்கள் புரட்டாசி-ஐப்பசி இதழ்கண்டு இன்புற்றேன். புதுமைக் கருத்துக்களைப் புதுப்பொலிவுடன் பதித்துவரும் உன்பணியை நான் மனமார வாழ்த்துகிறேன். 'எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்' என்னும் செய்தி மிகவும் நன்றாக அமைந்தது. பல மைல்களுக்கப்பால் தாம் இருந்தாலும், வெளிநாட்டில் உள்ளவர்களின் பழக்கவழக்கங்களை ஓரளவில் அறியக்கூடியதாக இருக்கிறது.

றேகன் அன்ரன்,
பண்டாரவளை.

புதிய உலகமே, புதுப் பொலிவுடன் புதிய உலகத்தைக் காண அழைத்துச் செல்லும் உன்னை மறப்பதெப்படி? உன் புரட்டாசி ஐப்பசி இதழ்கண்டு மகிழ்ச்சியில் திளைத்தேன். தீண்டாமை பற்றிய கட்டுரைகளும் கதைகளும் பலே ஜோர், படிப்பிருந்தும் மனிதப் பண்பறியாத தமிழ் மக்களுக்கு சவுக்கடி கொடுத்தாயே, வளர்க உன் பணி.

வியாபாரிகளே !

புதிய உலகத்தின் மூலம்

**விளம்பரம் செய்து பயனடையுங்கள்**

பின் முழு அட்டை வெளிப்பக்கம்

| | | | |
|---|---|---|---|
| | ஒரு இதழுக்கு | ... ரூபா | 200/- |
| ,, | ,, ஒரு வருடத்துக்கு | ... ரூபா | 1000/- |

பின் முழு அட்டை உட்பக்கம்

| | | | |
|---|---|---|---|
| | ஒரு இதழுக்கு | ... ரூபா | 125/- |
| ,, | ,, ஒரு வருடத்துக்கு | ... ரூபா | 600/- |

உள்ளே முழுப்பக்கம் ஒன்று

| | | | |
|---|---|---|---|
| | ஒரு இதழுக்கு | ... ரூபா | 75/- |
| ,, | ,, ஒரு வருடத்துக்கு | ... ரூபா | 400/- |

உள்ளே அரைப்பக்கம்

| | | | |
|---|---|---|---|
| | ஒரு இதழுக்கு | ... ரூபா | 50/- |
| ,, | ,, ஒரு வருடத்துக்கு | ... ரூபா | 250/- |

புதிய உலகம்'

## அட்டைப்பட விளக்கப் போட்டி

இவ்விதழின் அட்டைப்படத்தின் பொருள் என்ன ?

விளக்கத்தை முழுத்தாளின் ஒரு பக்கத்துக்குள் அடங்கக்கூடியதாக, சுருக்கமாகவும், தெளிவாகவும் எழுதி அனுப்புங்கள்.

தெரிவு செய்யப்படும் சிறந்த விளக்கத்துக்கு ரூபாய் 25/- அல்லது இருபத்தைந்து ரூபாய் பெறுமதியான "டயறி" பரிசளிக்கப்படும். விடைகள் 20-1-1980-க்கு முன்னர் "ஆசிரியர்", புதிய உலகம், த. பெ. இல. 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

— வெளியீட்டாளர்

புனித வளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.

'புதிய உலக'த்தின் புதுமையான

பணிக்கு

எமது வாழ்த்துக்கள்

# K. K. S. EXPORTS

181, Dam Street,
COLOMBO, 12.

*T'phone :* **32802,** *Gram :* **SABAI**


Nadarajah

Miss K. N. Rajah
Chulipuram

Kala